அரசு ஊழியர்

மாத இதழ்

2024 பிப்ரவரி

மலர்:45 இதழ்:02

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர்: மு.அன்பரசு

ஆசிரியர்: ஆ.செல்வம்

ஆசிரியர் குழு:
மு.அன்பரசு, மு.பாஸ்கரன்,
தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன்,
கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி,
சா.டானியல் ஜெயசிங்,
சா.கோதண்டபாணி, அ.குபேரன்

வரைகலை: கார்ட்டூன்வாசி

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி 9677003178

இதழ் ஒருங்கிணைப்பு: ஜிஜி

முகவரி:
பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com

அச்சகம்:
சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600002

ஆண்டுச் சந்தா : ரூ.200
தனி இதழ் : ரூ.20

இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனாங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.

# உள்ளே...

1. **போராட்டங்கள் என்ற பேராயுதங்களால் மறுக்கப்பட்டுள்ள வாழ்வாதார உரிமைகளை மீட்போம்!** *தலைவர் மடல்* ....4
2. **வாழ்வாதார கோரிக்கைகளை மீட்டிட ஜாக்டோ-ஜியோ தொடர் போராட்டம்!** *பொதுச் செயலாளர் மேசையிலிருந்து*....9
3. **போக்குவரத்து ஊழியர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி உடனடியாக சரிசெய்யப்பட வேண்டியது அரசின் கடமை!** ....12
4. **காப்பாத்தறது யாரு?**....13
5. **தேசிய குறைந்தபட்ச ஊதியம்!**....14
6. **உபயோகமில்லாத பழைய பொருட்கள் வாங்கப்படும்!**.......15
7. **பிரதமர் மோடிக்கு காவல்துறை உயர் அதிகாரியின் பதில்!**....16
8. **கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றக்கோரி அமைச்சர் துரைமுருகன் அவர்களிடம் கோரிக்கை மனு!**....18
9. **கொல்கத்தாவில் நடைபெற்ற 18-வது தேசிய கவுன்சில்**....22
10. **எரியும் பூந்தோட்டம்!** ....25
11. **மகளிர் மாநில சிறப்பு மாநாடு!**....28
12. **நான் யார்? - பெரியார்**....30
13. **பேனாவிலிருந்து பேப்பரில் சலிக்கும் உருவம்!**....32

தலைவர் மடல்

# போராட்டங்கள் என்ற பேராயுதங்களால் மறுக்கப்பட்டுள்ள வாழ்வாதார உரிமைகளை மீட்போம்!

உழைக்கும் வர்க்கம் போராடாமல் எந்த உரிமையையும் பெற முடியாது என்ற நிலைமை மாறி இப்போது, போராடாமல் விட்டு விட்டால் இருக்கும் உரிமைகள்கூட பறிபோய்விடும் என்ற நிலைமை உருவாகியுள்ளது. அமைப்பு ரீதியாக ஒருங்கிணைக்கப்பட்ட உழைப்பாளி வர்க்கம் போராடாவிடில் அதன் தரம் தாழ்ந்து விடுவதோடு, ஒட்டுமொத்த சமூகமும் முன்னேற்றமின்றி தாழ்ந்து அழியும். எனவே, சமரசமற்ற தொடர் போராட்டங்களை நடத்திட வலுவான இயக்கத்தை கட்டி அமைப்பதே நமது முதற் கடமையாகும்.

"உழைக்கின்ற தொழிலாளர்கள் அல்லது ஊழியர்கள் தாங்களாகவே விரும்பி ஒன்றிணைந்து அமைத்துக் கொள்ளும் அமைப்புதான் சங்கம் அல்லது தொழிற்சங்கம் அல்லது இயக்கமாகும். அன்றாடம் வெடித்துக் கிளம்பும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், உடனடிப் பொருளாதாரக் கோரிக்கை களுக்காகவும் போராடி தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் கருவி மட்டுமா சங்கம்? இல்லை. உழைக்கும் வர்க்கத்தினுடைய வர்க்க உணர்வை வளர்த்தெடுப்பது, அவர்கள் சமூக மாற்றத்திற்கால வரலாற்றுக் கடமையை, செயல்நோக்கத்தை கற்றுக் கொள்ளும் தொடக்கப் பள்ளிக்கூடமாகவும் இந்த தொழிற்சங்க இயக்கம் விளங்க வேண்டும். உடனடித் தேவைக்காகவும், கோரிக்கைகளுக்காகவும் நடத்தும் போராட்டங்கள் அனைத்தும் சமூக மாற்றத்திற்காக நடத்தப்படும் நெடிய போராட்டத்தின் ஒரு பகுதியே. எத்தகைய தடைகள் ஏற்பட்டாலும், அவைகளை உறுதியுடனும், நிதானமாகவும், விடாமுயற்சியோடும், தியாக மனப்பான்மையோடும் எதிர்கொண்டு "வெற்றி"யைப் பறித்தெடுக்க வேண்டும்" என்கிறார் தோழர் எம்.ஆர்.அப்பன்.

கூட்டணி பேரங்கள் துவங்கி விட்டன. நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகளில் அரசியல் கட்சிகள் தீவிரமாய் இறங்கிவிட்டன. இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னர் சட்டசபை தேர்தல் நேரத்தில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு தமிழக முதல்வர் சொன்ன வார்த்தைகள், கொடுத்த உறுதிமொழிகள் பற்றி எந்த அசைவும் இன்றுவரை இல்லை.

பழைய ஓய்வூதியத் திட்டம் நிச்சயம் அமல்படுத்தப்படும், சரண்டர், வரையறுக்கப்பட்ட ஊதியம், காலிப் பணியிடங்களை நிரப்புதல் போன்றவை நிச்சயம் நிறைவேற்றப்படும்... என்ற முதல்வரின் வாக்குறுதிகளும்... இதுநாள்வரை நிறைவேற்றப் படவில்லை. இனிமேலுமாவது நிறைவேறுமா என்ற நம்பிக்கையும் கிட்டத்தட்ட நீர்த்துபோயிருக்கிறது.

நாற்பது வருடங்களை கண்டிருக்கிற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கடந்த இருபது ஆண்டுகளாக பழைய ஓய்வூதியத் திட்டத்தை திரும்ப கொண்டு வருவதற்காக களத்தில் நின்று தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறது. எந்த அரசியல் கட்சிகளும் அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை இது தங்களின் நியாயமான உரிமைக்களுக்காக போராடும் ஒவ்வொரு இயக்கத்தின் தன்மானத்தை உரசிப்பார்க்கும் செயலாகும். கிட்டத்தட்ட இது அவமானம். இந்த நம்பிக்கைத்துரோகம் தீவிரமானதொரு புரட்சிக்கு ஊழியர் சமுதாயத்தை உந்தித் தள்ளிக் கொண்டிருக்கிற அகாலம்.

எத்தகைய இடர் வரினும் அரசு ஊழியர்கள் தாங்கள் முன்வைத்த காலை, உரிமைகளை

வென்று முடிக்கும் வரை பின்வைக்க மாட்டார்கள் என்பதை அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் நிரூபித்துக் காட்ட வேண்டிய நெருப்புத் தேர்வு இப்போதைய நிர்ப்பந்தமாகியிருக்கிறது. புதிய உரிமைகளை போராடிப் பெறுவதற்காக உருவாக்கப்பட்ட இயக்கம் இன்றைய சூழலில், இருக்கின்ற உரிமைகளை தக்க வைத்துக்கொள்ளவே தலைகீழாக நின்று போராட வேண்டியிருக்கிறது. பழைய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெறுவதற்காக கடந்த இருபது ஆண்டுகளாக போராடிக் கொண்டிருக்கிறோம். ஊதிய முரண்பாட்டை தீர்க்க வேண்டுமென்ற கோரிக்கை ஒரு தலைமுறையாக நிலுவையில் வைக்கப்பட்டிருக்கிறது.

காலிப் பணியிடங்களை நிரப்பிட வேண்டும் என்ற முறையீடுகள் முற்றாக நிராகரிக்கப்பட்டு இன்று ஆறு லட்சம் காலிப் பணியிடங்கள் அரசுத்துறைகளில் காலியாக விடப்பட்டுள்ள அவலம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அந்த ஆறுலட்சம் ஊழியர்களின் பணிகளை இப்போது பணியிலுள்ள அரசு ஊழியர்களாகிய நாம் முதுகெலும்பு உடைய சுமந்து கொண்டிருக்கிறோம். ஆறு லட்சம் தமிழக இளைஞர்களின் எதிர்காலமும் வாழ்வாதாரமும் இதன்மூலம் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது என்ற சமூகநீதிக் கோட்பாட்டையும் அரசாங்கத்தின் முன் வைத்து போராடுகிறோம். ஆனால் எந்த அரசாங்கமாக இருந்தாலும் சமூக நீதியைப்பற்றி, தமிழக இளைஞர்களின் எதிர்காலம் பற்றி அக்கறை கொள்வதாக இல்லை. அதற்கு மாறாக அவுட்சோர்சிங் அரசாணைகளை வெளியிட்டு இடஒதுக்கீட்டு கொள்கைளை இழுத்து மூடவும், அரசுத்துறைகளை தனியார்மயமாக்கும் நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளவும்தான் முனைந்துள்ளன. தேர்தல் வாக்குறுதி என்ற பொய் அறிக்கை மூலம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் போன்ற அனைத்துத்தரப்பு உழைக்கும் மக்களின் அவர்தம் குடும்பத்தாரின் ஓட்டுக்களை பெற முனைந்து நிற்கின்ற அரசியல் தலைவர்கள்தான் இன்றைய ஆளமைகளாக உள்ளனர். அரசு ஊழியர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் நியாயமான கோரிக்கைகளில் ஒன்றைக்கூட இந்த அரசாங்கம் நிறைவேற்றாதது அரசு ஊழியர்கள் ஆசிரியகள் என அரசு ஊதியம் பெறும் அனைவரையும் ஏமாற்றத்தில் ஆழ்த்தியுள்ளது.

வாக்களித்தபடி புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெறாதது, உறுதியளித்தபடி சத்துணவு ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்காதது, சிறப்பு காலமுறை ஊதியம் பெறுபவர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் நிர்ணயிக்காதது, சாலைப்பணியாளர்களின் 41 மாத பணிநீக்க காலத்தை பணிவரன்முறை செய்து 41 மாத ஊதிய இழப்பை வழங்கிட வைக்கப்பட்ட கோரிக்கை பரிசீலிக்கப்படாமல் இருப்பது, சரண்விடுப்பு ஒப்புவிப்பை நிறுத்தி வைத்துள்ளது, 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகையை இதுவரை வழங்காமல் உள்ளது, அரசுத்துறைகளில் அவுட்சோர்சிங் முறை மற்றும் ஆட்குறைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது, தமிழக அரசுத்துறைகளில் காலியாக உள்ள ஆறு லட்சம் பணியிடங்களை நீண்ட நாட்களாக நிரப்பிடாதது போன்றவை அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மத்தியில் கொந்தளிப்பையும், இளைஞர்கள் மத்தியில் நம்பிக்கையின்மையைம் விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

சமூக நீதிக்காக போராடிய திராவிட அரசாங்கங்கள்தான் இன்று சொந்த நாட்டில் இளைஞர்களை கையேந்தும் நிலைக்கு ஆளாக்கியுள்ளன. இம்மாநிலத்தில் வருடந்தோறும் 3 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதி காற்றில் கரைந்து காணாமல் போனதுதான் திராவிட மாடல் அரசாங்கத்தின் சாதனையாக உள்ளது. அரசு ஊழியர்கள் ஆசிரிகளின் இன்றைய இக்கட்டான நிலைக்கு முக்கிய காரணம் சென்ற தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடுத்த நம்பிக்கைகளும், வாக்குறுதிகளும்தான். அவர் அரசு ஊழியர்கள் நடத்திய போராட்ட களங்களுக்கே சென்று அப்போதைய ஆளும் கட்சியிடம் அரசு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றக் கோரி முதல்குரல்

கொடுத்தவர். கொடுத்ததோடு மட்டுமல்லாமல் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களின் அனைத்து கோரிக்கைகளையும் ஆட்சிக்கு வந்ததும் தீர்த்து வைப்பேன் என்று உறுதிமொழியையும் தந்தார். அவர் சொன்னபடி அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தங்கள் குடும்பத்தினருடன் வாக்களித்ததோடு மட்டுமல்லாமல் பிரச்சாரங்களும் செய்து திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வராக அமர முக்கியப் பங்காற்றினோம். ஆனால் முதல்வராகி இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் அவர், தேர்தலிலும் அதற்கு முன்பும் கொடுத்த வாக்குறுதிபடி அரசு ஊழியர்களின் கோரிக்கைளில் ஒன்றைக்கூட செயல்படுத்தாமல் இருப்பதோடு, அரசாங்கத்தை நேரெதிர் திசையில் இயக்க ஆரம்பித்துள்ா்ர்.

அவுட்சோர்சிங் அரசாணைகளை வெளியிட்டு ஒட்டுமொத்த அரசாங்கத்தையும் தனியார்மயமாக்கும் முடிவை ஒரு திராவிட மாடல் அரசு முன்னெடுத்துள்ளதை ஊடக விமர்சகர்கள் முதற்கொண்டு கூட்டணித் தலைவர்கள் வரை ஆச்சரியம் கலந்த அதிர்ச்சியோடு பார்க்கிறார்கள். இதன்மூலம் ஆட்சியாளர்கள் (எந்தக் கட்சியாக இருந்தாலும்) அவர்கள் ஆசிரியர்கள், அரசு ஊழியர்களுக்கான உரிமைகளை, சட்டப்படியான உரிமைகளை கொடுப்பதற்கு மனமற்றவர்களாக உள்ளார்கள் என்பது உறுதிபடுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், அரசுப்பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் என அனைத்து அரசு ஊதியம் பெறக்கூடிய குடும்பத்தினர் ஓட்டுக்களை பெறுவதற்காக எந்த நிலைக்கும் இறங்கி வந்து பொய்யான வாக்குறுதிகளைச் சொல்வார்கள் என்பதும் மீண்டும் மீண்டும் உணர்த்தப்பட்டுள்ளது. இதுதான் இந்த அரசாங்கத்தின் நிலை என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டு வரும் நிலையில் அரசு ஊழியர்கள் தங்கள் போராட்டங்களை அடுத்த நிலைக்கு கொண்டு செல்ல வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள்.

இந்த 40 ஆண்டு காலத்தில் அரசாங்கங்களின் நடவடிக்கைகளும் அதை அரசு ஊழியர்கள் எதிர்கொண்டு போராடி வெற்றி பெற்ற விதங்களும் அவர்களுடைய நாளைய போராட்டங்களுக்கான விதைகளாகும். ஊழியர்கள் மத்தியில் தொய்வையும், சோர்வையும், சலிப்பையும் ஏற்படுத்துவதன் மூலம் போராட்டங்களை நீர்த்துப்போகச் செய்யலாம் என்ற அரசாங்கத்தின் போக்கை அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் உடைத்தெறிய வேண்டிய மனநிலைக்கு வந்திருக்கிறார்கள். அதிகாரம், பொய்யான வாக்குறுதிகள், அரசாணைகள், அவசரச் சட்டங்கள் போன்றவற்றின் முலம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் போன்றவர்களின் சட்டப்படியான உரிமைகளை பறிக்க நினைக்கும் அரசாங்கம், நிறுவனம் மற்றும் அமைப்புகளிடமிருந்து உரிமைகளை மீட்டுப்பெறுவதில் சுணக்கமோ, நம்பிக்கையின்மையோ ஏற்பட்டுவிடாமல் போராட்டத்தை வெற்றிகரமாக மாற்றிட ஒரு முழுமையான கருத்தொற்றுமை இந்நேரத்தில் மேற்கொள்ள வேண்டியுள்ளது. போராட்டங்களை காலத்திற்கேற்ப மாற்றி அமைத்து எவ்வளவு நாள் போராடினாலும் எதுவும் செய்யமுடியாது என்ற முரண்டு பிடிக்கும் அரசாங்கத்தை நம்முடன் வந்து பேச்சு வார்த்தை நடத்தியே ஆக வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தவல்ல நிர்ப்ந்தத்தை நாம் உருவாக்கிட வேண்டும்.

ஒவ்வொரு இயக்கமும் ஒவ்வொரு போராட்டமும் இருப்பை நிலைநிறுத்துவது மட்டுமல்ல அது ஒவ்வொரு அரசு ஊழியரிடமும் உரிமைக்கான நெருப்பை பற்ற வைப்பது. அரசு ஊழியர்கள் அனைவரும் அவர்களுடைய விதியை மாற்றி எழுதுவதற்கான சக்தியை பெற்றிருக்கிறார்கள். அந்த சக்தி, பெரு நெருப்பாக தீச்சுவாலையாக கொழுந்து விட்டு எரியும் போது நம்முடைய கொந்தளிப்பின் உணர்ச்சியை ஆட்சியாளர்கள் உணர்வார்கள். எவ்வளவு நெருக்கடியான காலகட்டத்திலும் அரசிற்கு உறுதுணையாக நின்றிருக்கிறார்கள் அரசு ஊழியர்கள் என்ற வரலாற்றை அவர்கள் புரிந்து கொள்வார்கள். அதை அவர்களுக்கு அஹிம்சையால் புரிய வைக்க முயன்று முடியாமல் போய்விட்டதால் அந்த அஹிம்சைக்கு சற்றும் குறையாத

வலிமைமிக்க போராட்டங்களால் புரிய வைக்க போராட்ட களம் என்ற போர்க்களம் நோக்கிய பயணத்தை அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் தொடங்கியிருக்கிறார்கள்.

சிவில் சமூகத்தைக் கைப்பற்றும் அரசியல்வாதிகளுடைய அஜண்டா தங்குதடையின்றி முன்னோக்கிச் செல்கிறது. கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, நம்பிக்கைத் துரோகங்களைத்தாங்கிக் கொண்டு முன்னேறும் போர்வீரனைப் போல் இன்றைய காலகட்டத்துக்கான ஒரு போராட்ட வடிவத்தையும், முழக்கங்களையும் உருவாக்கிட வேண்டிய அவரச அவசியம் அரசு ஊழியர்களுக்கு எழுந்துள்ளது. அரசியல்வாதிகள் தங்கள் அஜண்டாவில் சற்றும் பின்வாங்காதபோது நாடாளுமன்றத் தேர்தல் வரும் சூழ்நிலையில் அரசு ஊழியர்களின் அஜண்டா என்ன என்பதை ஆட்சியாளர்கள் உணர இப்போதே உக்கிரமானதொரு போராட்டத்திற்கு அரசு ஊழியர்கள் ஆயத்தமாகி வருகிறார்கள்.

பிறப்புக்கு பின்னும் இறப்புக்கு முன்னும் இங்கே மாறாதது என்று எதுவும் இல்லை. அரசு ஊழியர்கள் தாங்கள் விரும்பக்கூடிய மகிழ்ச்சியை மற்றவர்களுக்கும் தேடித்தரும் துடிப்பில் உள்ளனர். அரசு ஊழியர் வர்க்கம் நிகழ்கால சமூகத்தையும் தாண்டி ஒரு வருங்கால சமூகத்தை படைக்கக்கூடிய வர்க்கம் என்பதை நம்மை மறுப்போர்க்கும் மிதிப்போர்க்கும் மீண்டும் ஒருமுறை நிரூபித்துக் காட்டும் துடிப்பில் உள்ளது.

வரவிருக்கிற போராட்டங்கள் நாம் விரும்பி ஏற்ற போராட்டங்கள் அல்ல, இவை நம்மீது திணிக்கப்பட்டுள்ள போராட்டங்கள். இந்தப்போராட்டங்களை திணித்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் கிழிந்து தொங்குகிற அளவுக்கு அரசு ஊழியர்களின் போராட்ட யுத்திகளும் செயல் திட்டங்களும் இருக்கும். ஜாக்டோ ஜியோ அமைப்புடன் சேர்ந்து நாம் கீழ்க்கண்ட கோரிக்கைகளுக்காக போராட்ட களம் காண்கிறோம்.

- 1.4.2003க்குப் பிறகு அரசுப்பணியில் சேர்ந்தோருக்கு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தினைக் கைவிட்டு, பழைய ஓய்வூதியத் திட்டத்தினையே அமல்படுத்திட வேண்டும்.
- காலவரையின்ற முடக்கி வைக்கப்பட்டுள்ள சரண் விடுப்பு ஒப்படைப்பு, உயர் கல்விக்கான ஊக்க ஊதிய உயர்வு ஆகியவற்றை உடனடியாக வழங்கிட வேண்டும்.
- தொடக்க கல்வித்துறையில் பணிபுரியும் 90 சதவீதத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் வகையில் வெளியிடப் பட்டுள்ள பள்ளிக் கல்வித்துறை அரசாணை எண்.243 நாள்:21.12.2023ஐ உடனடியாக ரத்து செய்திட வேண்டும்.
- இடைநிலை ஆசிரியர்களுக்கு, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி த்மையாசிரியர்களுக்கு, உடற்கல்வி இயக்குநர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு ஒன்றிய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கப்படாமல் இழைக்கப்பட்டு வரும் அநீதி களையப்பட வேண்டும்.
- முதுநிலை ஆசிரியர்கள், அனைத்து ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், அரசுப் பணியாளர்கள், கண்காணிப் பாளர்கள், தலைமைச் செயலகம் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், களப்பணியாளர்கள், பல்வேறு துறைகளில் உள்ள தொழில்நுட்ப ஊழியர்கள், ஊர்தி ஓட்டுநர்கள், ஆகியோருக்கான ஊதிய முரண் பாட்டினைக் களைய வேண்டும். கல்லுhரி பேராசிரியர்களுக்கான நிலுவையிலுள்ள பணிமேம்பாடு (CAS) ஊக்க ஊதிய உயர்வு உடனடியாக வழங்கிட வேண்டும். உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களை பட்டதாரி ஆசிரியர்களாக உயர்த்த வேண்டும்.
- சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் சத்துணவு, அங்கன்வாடி வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள்,

ஊர்ப்புற நூலகர்கள், கல்வித்துறையில் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்கள், தொகுப்பு ஊதியத்தில் பணியாற்றும் ஆசுக்ஷ செவிலியர்கள், சிறப்பு ஆசிரியர்கள், பல்நோக்கு மருத்துவமனைப் பணியார்கள் ஆகியோருக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட வேண்டும். மேலும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித்துறையில் பணியாற்றும் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் பகுதிநேர ஆசிரியர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும்.

- அரசின் பல்வேறு துறைகளில் 30 விழுக்காட்டிற்கு மேலாக காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிடுவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.
- 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகை அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் - அரசுப்பணியாளர்கள் ஆகியோருக்கு மறுக்கப்பட்டுள்ளதை உடனடியாக வழங்கிட வேண்டும்.
- 2002 முதல் 2004 வரை தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்களின் பணிக் காலத்தினை அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறைப் படுத்தி ஊதியம் வழங்கிட வேண்டும்
- சாலைப்பணியர்களின் 41 மாத பணி நீக்க காலத்தினை முறைப்படுத்த வேண்டும்.

இவற்றை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்வதற்காக நாம் கீழ்க்கண்ட போராட்டங்களை வடிவமைத்துள்ளோம்.

**போராட்ட அறிவிப்புகள்**

1. 22.01.2024 முதல் மூன்று நாட்கள் மாநிலம் முழுவதும் கோரிக்கைகளை வலியுறுத்தி 24.01.2024 வரை ஆசிரியர், அரசு ஊழியர் சந்திப்புப் பிரச்சார இயக்கம் நடத்துவது.
2. 30.01.2024 அன்று மாவட்டத் தலைநகரங்களில் மறியல் போராட்டம் நடத்துவது.
3. 05.02.2024 முதல் 09.02.2024 வரை அரசியல் கட்சித் தலைவர்களைச் சந்தித்து ஆதரவு கோருவது.
4. 10.02.2024 அன்று மாவட்ட அளவில் வேலை நிறுத்த போராட்ட ஆயத்த மாநாடு நடத்துவது.
5. 15.02.2024 அன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் நடத்துவது.
6. 26.02.2024 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் நடத்துவது

அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் அனைவரும் இப்போராட்டங்களில் கலந்து கொண்டு நம் வாழ்வாதார உரிமைகளை மீட்டெடுப்போம் வாருங்கள்.

●

## சூடா ஒரு கோப்பை சூப்

**நம்பாதே, அவனை நம்பாதே!**

தேளின் கொடுக்கில்
தேன் வரும் என்பான்;
தெருக் குழாயில்
பால் வரும் என்பான்!

காலென்று சொல்லி உன்
கையைப் பிடிப்பான்;
காரியம் ஆனதும்
கழுத்தையே நெரிப்பான்!

குடிசைக்குள் கால் வைப்பான்;
குழந்தைக்கும் பேர் வைப்பான்;
தேர்தல் முடிந்தால் உன்
கூரைக்கு தீ வைப்பான்!

தேர்தலென்று வந்துவிட்டால்
நீயே தான் எஜமானன்;
சபலம் கொண்டு சாயாதே - அது
அஞ்சு வருஷத்து அவமானம்!

- கவிஞர் க. சந்திரகலா

# வாழ்வாதார கோரிக்கைகளை மீட்டிட ஜாக்டோ–ஜியோ தொடர் போராட்டம்!

அரசு ஊழியர், ஆசிரியர் இயக்கங்களின் கடந்த காலத்தில் நடைபெற்ற போராட்டங்களே இன்று நாம் பெற்று வரும் உரிமைகளின் அடித்தளமாகும். பல்வேறு காலகட்டங்களில் நாம் நடத்திய போராட்டங்கள் குறிப்பிடத்தக்க மாற்றங்களை உருவாக்கியது. அத்தகைய போராட்டங்களின் ஜாக்டோ-ஜியோ சமீபத்தில் நடத்திய மறியல் போராட்டமும் ஒன்றாகும்.

லட்சக்கணக்கான அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் போராடிப் பெற்ற உரிமைகளை குழிதோண்டி புதைக்க நினைத்த அரசுகளின் கொள்கைகளை அடியோடு மாற்றியமைக்க நினைப்பது தாக்குதலை தகர்ப்பது என்பதற்கான போராட்டங்களை நடத்துவது அரசியலமைப்பு சட்டம் வழங்கியுள்ள உரிமையாகும். ஆனால் அதனை நிலை நாட்ட வேண்டிய அரசுகளும், நீதிமன்றங்களும் சில நேரங்களில் தவறான அணுகுமுறையை கையாள்கிறபொழுது வீதி மன்றத்தில் நாம் களமிறங்க வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டுவிடுகிறோம்.

இப்படிப்பட்ட நிலையில்தான் ஜாக்டோ-ஜியோ 2017ல் துவங்கி அரசு ஊழியர், ஆசிரியர்களின் வாழ்வாதாரக் கோரிக்கையான புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்தல் உள்ளிட்ட கோரிகக்கைகளை தீர்வு செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலையில் நீதிமன்றத்தில் நமது வழக்கு முடிவுக்கு வராத நிலையும் தொடர்ந்ததால் வீதி மன்றத்தில் முழக்கமிட முடிவு செய்தோம். இத்தகைய சூழ்நிலையில்தான் கடந்த அதிமுக அரசு 10 ஆண்டுகள் ஆட்சியில் இருந்தது. ஆனால் நமது கோரிக்கை குறித்து அழைத்து பேசபப்படவில்லை. கோரிக்கையும் தீர்க்கப்படாத நிலையில் 2021 சட்டமன்றத் தேர்தலில் அதிமுக அரசை அப்புறப்படுத்தி நம்முடைய கோரிக்கை தேர்தல் கால வாக்குறுதிகளாக சேர்ததது மட்டுமல்ல கடந்த கால போராட்டங்களிலும், ஆயத்த மாநாடுகளிலும் நேரடியாகவும், காணொலி மூலமும் பங்கேற்று நமது கோரிக்கைகளை திமுக அரசு வந்தால் நிறைவேற்றப்படும் என்று நம்பிக்கையிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேசியது எங்களோடு எப்பொழும் கட்சிகள் கூட்டணி வைக்கிறதோ இல்லையோ நீங்கள் எப்பொழும் கூட்டணி வைத்துள்ளீர்கள்.

அதே உணர்வோடு இந்த மாநாட்டில் பங்கேற்கிறேன். அரசு ஊழியர் இல்லை என்றால் அரசாங்கம் இல்லை. அரசு ஊழியர்கள் தான் அரசாங்கத்தை நடத்துகிறார்கள். அதை சொல்லத்தான் இங்கு வந்துள்ளேன். எப்பொழுதும் அரசு ஊழியர் நலனில் அக்கரை உள்ளது. கழக அரசு இப்பொழுது மட்டும்மல்ல எப்பொழும் அரசு ஊழியர்களின் கோரிகைகளை நிறைவேற்றித் தருகிறேன். என்னை திரும்பி பார்க்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் உங்களில் ஒருவன். அது மட்டுமல்ல. அரசு ஊழியர் சங்கம் அரசியல் தெளிவு பெற்ற சங்கம் என்று பேசியதை அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இன்றும் மறக்கவில்லை.

எனவேதான் ஜாக்டோ-ஜியோ ஒருங்கிணைப்பாளர்கள் 6 முறை தங்களை சந்தித்து எங்களது நியாயமான கோரிக்கை குறித்து பேசி உள்ளோம். அப்பொழுதும்

எல்லாம் தமிழக அரசின் நிதி நிலை சரியானவுடன் உங்களது கோரிக்கைகள் தீர்க்கப்படும் என்று கூறியது நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் குறைந்தபட்சம் ஒரு சில கோரிக்கைகளையாவது நிறைவேற்றுவீர்கள் என நம்பி இருந்தோம். தீர்க்கப்படாத பட்சத்தில்தான் 2023 ஜனவரி 7ம் தேதி ஜாக்டோ-ஜியோ ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம், உயர்மட்டக்குழு கூட்டம் கூடி ஆறு கட்ட இயக்கம் நடத்திடமுவு செய்தோம். பிரச்சார இயக்கம், மற்றும் 2024 ஜனவரி 30 மாவட்டத் தலைநகரங்களில் மறியல் போராட்டம் வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளது.

வருகின்ற 2024 பிப்ரவரி 10 மாவட்டங்களில் வேலை நிறுத்த போராட்ட ஆயத்த மாநாடு, பிப்ரவரி 5 முதல் 9ம் தேதிவரை எங்களது கோரிக்கைகள் இடம்பெறாத அதிமுக, பிஜேபி கட்சிகளை தவிர்த்து அனைத்து அரசியல் கட்சி தலைவர்களை சந்தித்து கோரிக்கை மனுக்களை கொடுக்க உள்ளோம். அதன் உள்ளார்ந்த அர்த்தம் எங்களின் நியாயமான கோரிக்கைகள் நிச்சயமாக நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கை அரசு ஊழியர் சங்கத்திற்கும், ஜாக்டோ-ஜியோ அமைப்பிற்கும் உண்டு.

அதைத்தொடர்ந்து 2024 பிப்ரவரி 15 ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் இறுதியாக அரசின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் 2024 பிப்ரவரி 26ம் தேதி காலவரையற்ற வேலை நிறுத்தம் செய்ய உள்ளோம். இந்த இடைப்பட்ட காலத்தில் தேர்தல் கால வாக்குறுதியான புதிய பென்சன் ரத்து செய்து பழைய பென்சன் அமுல்படுத்த வேண்டும், சரண் விடுப்பு வழங்கப்பட வேண்டும், அரசுத்துறைகளில் உள்ள காலிப் பணியிடங்களை பூர்த்தி செய்ய வேண்டும், சிறப்பு கால முறை ஊதியம், தொகுப்பூதியம் பெறக்கூடிய அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு கால முறை ஊதியம் வழங்கப்பட வேண்டும், அரசு ஊழியர், ஆசிரியர் ஊதிய குறைபாடுகள் களையப்பட வேண்டும் உள்ளிட்ட 10 அம்சக் கோரிக்கைகளை நி¦வேற்ற கால அவகாசம் உள்ளது. மாண்புமிகு முதல்வர் அழைத்துப்பேசி தீர்வு காண வேண்டும்.

இந்த கால கட்டத்தில் கலைஞர் அவர்கள் பேசியது நினைவுக்கு வருகிறது. அரசு ஊழியர் சங்கத்திற்கும் தி.மு.க.வுக்கும் தொப்புள் கொடி உறவு உள்ளது என்பதற்கு சான்று 1984ல் தமிழ்நாடு அரசு உழியர் சங்கம் உதயமான பிறகு அன்றைய காலகட்டத்தில் முதல் மாநில மாநாடு 1984ல் சென்னையில் நடைபெற்றபோது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தான் துணிச்சலுடன் அன்று எதிர்க்கட்சிகள் வரிசையில் டாக்டர் கலைஞர் அவர்களை அழைத்து கௌரவித்தது. (2021 ஜனவரி மதுரையில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் வேலை நிறுத்த ஆயத்த மாநாட்டில் காணொலி மூலம் மாண்புமிகு முதல்வர் அவர்களை அழைத்து பேச வைத்தோம்.)

இவர்கள் கம்யூனிஸ்ட்கள் என என். ஜி.ஓ. சங்க தலைமை கலைஞர் அவர்களை சந்தித்து போகக்கூடாது என கூறிய பிறகும் என்.ஜி.ஓ. சங்கத்தால் இனி நமக்கு அரசியல் ஆதாயம் இருக்காது என உணர்ந்து அரசு ஊழியர் சங்க மாநாட்டில் கலைஞர் அவர்கள் பங்கேற்றார்.(கலைஞர் அவர்களால் தமிழ்நாடு அரசு ஊழியர் ச்ங்கம் பெரிய சங்கம் என வர்ணிக்கப்பட்டுள்ளது.)

1986 இரண்டாம் மாநில மாநாட்டில் பங்கேற்று கலைஞர் ஆற்றிய உரை அழைத்து வைத்து பேசி விவரங்களை தீர்ப்பதற்கு கூட தயாராக இல்லாத நிலைமை இம்மாநிலத்தில் உள்ளது. அது மாத்திரமல்ல. கோரிக்கை எழுப்பினாலே அவன் விரோதி. தன்னுடைய கருத்துக்களை

எடுத்து வைத்தாலே அவன் பகைவன் என்பது மாத்திரமல்ல. அவன் ஒழித்துக்கட்டப்பட வேண்டியவன். அப்படிப்பட்ட இயக்கம் இந்த மாநிலத்தில் இயங்கவே கூடாது என்று பழித் தீர்க்கின்ற முனைப்போடு ஒரு பரிபாலனம் தமிழகத்தில் நடைபெறுகின்ற காரணத்தால்தான் ஆடிக் கறக்கின்ற மாட்டை ஆடிக் கறக்க வேண்டும். பாடிக் கறக்கின்ற மாட்டை பாடிக் கறக்க வேண்டும். அடித்துக் கறக்கின்ற மாட்டை அடித்துதான் கறக்க வேண்டும் என்ற பழமொழியில் மூன்றாவது வழியைதான் அரசு ஊழியர்கள் பின்பற்ற வேண்டிய சூழ்நிலை எற்பட்டிருக்கிறது எனவும் அரசாங்கத்திற்கு சுலபமான வழி ஒன்று இருக்கிறது. பொது மக்களை தூண்டி விடுகிற வழி.

இந்தியாவிலேயே அரசு ஊழியர்களுக்கு நாங்கள்தான் அதிகமாக தருகிறோம் என்று அமைச்சர்கள் பொய்களை அவித்து விடுவதில் சாமர்த்தியர்கள். பொது மக்கள் கூட சம்பளமும், சலுகைகளும் இங்குதான் அதிகம் தருகிறார்களாமே... அப்படியிருக்க அரசு ஊழியர்கள் ஏன் போராட வேண்டும் என்று அவர்கள் சிந்திக்கும் வகையில் பொது மக்களை அரசு ஊழியர்களுக்கு எதிராகத் திருப்ப இந்த அரசு செய்கின்ற முயற்சிக்கு நீங்கள் ஆட்பட்டு விடக்கூடாது என்றம் இவர்களுக்கு தெரிந்த ஒரே கலை என்னவென்றால் எந்தவொரு இயக்கம் உருவானாலும் ஒற்றுமையோடு, ஒருமைப்பாட்டுத் தன்மையோடு, உரிமைக்குரல் கொடுக்க ஒரு இயக்கம் எங்கே உருவானாலும் அதை இரண்டாகப் பிரிப்பது, அந்த இயக்கத்தை தன்னுடைய காலடியில் வந்து சரணாகதி அடையக்கூடிய தொண்டரடிப்பொடி ஆழ்வார்கள் யார் இருக்கிறார்கள் என்று பொறுக்கி எடுப்பது நாம் கேட்கின்ற கோரிக்கைகளையெல்லாம் அவர்களை விட்டு கேட்கச் சொல்வது, அப்படி கேட்டபிறகு அவர்கள் கேட்டதில் ஒன்றையோ... இரண்டையோ நிறைவேற்றுவது மறுநாள் சென்னையிலேயே உள்ள சுவரெங்கும் நன்றி...நன்றி... என்று சுவரொட்டி ஒட்டுவது, இப்படி பிரித்தாளும் சூழ்நிலை இன்றைக்கும் விடாப்பிடியாக தமிழக அரசு பிடித்துக் கொண்டு அரசு ஊழியர்களை, ஆசிரியர் பெருமக்களை பாட்டாளி பெருமக்களை மாசுப்படுத்தி அந்த பிரிவிலே தன் ஆதிகக்கத்தை செலுத்தலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறது எனவும், சில நேரங்களில் தீர்ப்புகள் தாமதப்படலாம். ஆனால் நல்ல தீர்ப்பு என்றைக்கும் நியாயத்தின் பக்கம்தான் இருக்கும் என்ற நம்பிக்கையோடு பாடுபட வேண்டும். அப்படிப் பாடுபடக்கூடிய அணிதான் இந்த அணி எனவும் ஆழத்திருத்தமாக கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார். இவை எல்லாம் கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சி தலைவராக இருக்கும்போது மாநாடுகளில் ஆற்றிய உரை.

மேற்கண்டவாறு கலைஞர் அவர்கள் கூறிய கருத்தக்களை உள்வாங்கிக் கொண்டு தமிழக அரசு, நமது கோட்டை முற்றுகைப் போராட்டம் மற்றும் மறியல் போராட்டத்தை உணர்த்தியிருக்கும் என நம்புகிறோம். ஜாக்டோ-ஜியோவின் தொடர் போராட்டங்களை கணக்கில் எடுத்துக்கொண்டு விரைவில் ஜாக்டோ-ஜியோ ஒருங்கிணைப்பாளர்களை அழைத்து பேசி தீர்வு காணும் என்று நம்புகிறோம்.

அதற்கான இடைவெளிதான் நமது 2024 பிப்ரவரி 10 வேலை நிறுத்த ஆயத்த மாநாடு அடையாளமாகவும், பிப்ரவரி 15 ஒரு நாள் வேலை நிறுத்தமும், வரலாற்று சிறப்பு மிக்க பிப்ரவரி 26 மாநிலம் தழுவிய அளவில் காலவரையற்ற வேலை நிறத்தம். பங்கேற்போம். நமது வாழ்வாதார கோரிக்கையை வென்று எடுப்போம். அணி திரள்வீர்! தோழர்களே! ●

# போக்குவரத்து ஊழியர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி உடனடியாக சரிசெய்யப்பட வேண்டியது அரசின் கடமை!

தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில தலைவர் மு. அன்பரசு மற்றும் பொதுச்செயலாளர் ஆ. செல்வம் ஆகியோர் இணைந்து வெளியிட்ட ஊடகச் செய்தி

அரசு போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற ஓய்வூதியதாரர்களுக்கு கடந்த 96 மாதங்களாக வழங்கப்படாமல் உள்ள அகவிலைப்படியை வழங்க வேண்டும், போக்குவரத்துத் துறையின் வரவு மற்றும் செலவுக்கு இடையேயான வித்தியாசத் தொகையை பட்ஜெட்டில் ஒதுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட 6 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி 08.01.2024 நள்ளிரவு முதல் போக்குவரத்து ஊழியர்கள் வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளப் போவதாக அறிவித்து இருந்தனர். இந்தப் போராட்டத்திற்கு அனைத்துத்துறை ஓய்வூதியர்கள், மறுமலர்ச்சி தொழிலாளர் முன்னணி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் உள்பட தொழிற்சங்கங்கள், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மற்றும் மக்கள் அமைப்புகள் ஆதரவு தெரிவித்து போக்குவரத்துத் தொழிலாளர்களின் கோரிக்கைகளை அரசு ஏற்று, வேலைநிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என வலியுறுத்தின.

மேலும் இக்கோரிக்கைகளை வலியுறுத்தியும், வெளிமுகமை மற்றும் தற்காலிக நபர்களை வைத்து பேருந்துகளை இயக்கக் கூடாது என வலியுறுத்தியும் தமிழ்நாடு முழுவதும் அரசு போக்குவரத்துக் கழக பணிமனைகள் முன்பு தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வேலை நிறுத்தத்தை தவிர்க்க, தொழிலாளர்களுக்கு தராமல் நிறுத்தி வைத்துள்ள, 8 வருட அகவிலைப் படி உயர்வை ஜனவரி 2024 இந்த மாதத்தில் இருந்து அமல்படுத்துங்கள். 8 வருட நிலுவை குறித்து பிறகு பேசலாம் என்றும் பணியில் உள்ள தொழிலாளர்களுக்கு 4 மாதமாக வழங்காமல் உள்ள அகவிலைப்படியை கொடுங்கள் என்றும் கோரிக்கை வைக்கப்பட்டு அவை ஏற்கப்படாமல் உள்ளது.

ஆனால் மாண்புமிகு அமைச்சர் இப்பிரச்சனையை தீர்க்க முன்வராமல் 4 கோரிக்கைகளை நிறைவேற்றிவிட்டதாக கூறுவது உண்மைக்கு புறம்பானதாகும். ஆண்டுக்கணக்கில் வரவுக்கும் செலவுக்கும் வித்தியாசமான தொகையை வழங்கவும், காலிப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இப்போதும் அமைச்சர் பொய்யான காரணங்களை சொல்வதோடு தொழிலாளர்கள் அரசியல் காரணங்களுக்காக போராட்டம் நடத்துவதாக அவர் குற்றம்சாட்டுவதில் எந்தவித நியாயமும் இல்லை. சிஐடியு, தொமுச உள்ளிட்ட கூட்டமைப்பு சங்கங்கள் கடந்த ஆட்சியில் எந்த கோரிக்கைகளுக்காக போராடினார்களோ அதே கோரிக்கைகளை முன்வைத்து தான் இப்போதும் போராடுகிறார்கள்.

சென்ற ஆட்சியில் கேட்கப்பட்ட அதே கோரிக்கைகளை இப்போது கேட்கும்போது பெரிய குற்றம் செய்ததைப் போல, அரசியல் சாயம் பூசுவது உண்மையை பார்க்க மறுப்பதாகும். 8 ஆண்டுகளாக காத்துக்கிடக்கும் ஏழைத் தொழிலாளியின் வறுமையைப் போக்க வேண்டியது அரசின் கடமை ஆகும். போக்குவரத்து தொழிலாளர்களுடைய பணத்தை எடுத்து பயன்படுத்திவிட்டு அவர்களுக்கு உரியதை கொடுக்காமல் நிறுத்தி

வைத்துக்கொண்டு இப்போது அதை தவணை முறையில் தருவதாகக் கூறுவது ஏற்கத்தக்கதல்ல. மாதம் 72 கோடி ரூபாய் பிடிக்கக் கூடிய இந்த கோரிக்கைகளை எந்த சிரமும் இல்லாமல் போக்குவரத்துக் கழக நிதியிலேயே தர முடியும். ஆனால் இதற்கு நிதித்துறை அனுமதி தர வேண்டும் என்று பொருத்தமற்ற சமாதானம் கூறுவதுதான் வேலை நிறுத்தத்திற்காண முக்கிய காரணம். அரசு உடனே போக்குவரத்து தொழிலார்களுடைய கோரிக்கைகளை ஏற்று வேலை நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

அரசு பேச்சு வார்த்தையில் ஒப்புக்கொண்டவற்றையோ அல்லது நீதிமன்றத் தீர்ப்புகளையோ அமலாக்க முன்வராத சூழ்நிலையில் தான் இந்த வேலைநிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக தலைமை நீதிபதியின் அறிவுறுத்தலை ஏற்று வேலை நிறுத்தப் போராட்டத்தை ஜனவரி 19ம் தேதி வரை ஒத்தி வைக்க தொழிற்சங்கங்கள் ஒப்புக் கொண்டன. ஜனவரி 19ஆம் தேதி நடைபெற்ற பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படாததால் பிப்ரவரி 7ஆம் தேதிக்கு பேச்சுவார்த்தை தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து தொழிலாளர்களுடைய நியாயமான கோரிக்கைகளை அரசு உடனடியாக நிறைவற்றிட முன்வரவேண்டும் என தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் மாண்புமிகு முதல்வர் அவர்களை கேட்டுக்கொள்கிறது. போக்குவரத்து தொழிலாளர்களுடைய கோரிக்கைகள் நிறைவேறும் வரை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அவர்களுக்கு ஆதரவாக உடன் நிற்கும். நிதியின்மையை காரணம் காட்டி அவர்களுடைய வாழ்வாதாரத்தை முடக்கிவிடப் பார்ப்பது திராவிட மாடல் அரசுக்கு அழகல்ல என்பதால் கூடிய விரைவில் இந்த பிரச்சனைக்கு முற்றுப் புள்ளி வைக்க அரசை கேட்டுக் கொள்கிறோம். ●

# காப்பாத்தறது யாரு?

வருஷா வருஷம் ஒருத்தன் அய்யப்பன் கோயிலுக்கு மாலை போடுறான், இன்னொருத்தன் திருப்பதி உண்டியல்ல கொண்டு போய் காச கொட்டுறான், இன்னொருத்தன் வேளாங்கண்ணிக்கு நடந்து போறான், இன்னொருத்தன் ஃப்ளைட் பிடிச்சு மெக்கா போறான். ஏன்டா இவ்வளவு காச செலவு பண்ணி, கடன் வாங்கி அங்க எல்லாம் போறீங்கனு கேட்டா... அப்போதான் கடவுள் காப்பாத்துவார்னு சொல்றான்.

மழை பெய்து வெள்ளம் வருது, வீட்டுக்குள்ளார தண்ணி வருது... கரண்ட் கட் ஆகுது, கவர்மண்ட் காப்பாத்தலையானு கேட்கிறான். கவர்மண்ட் காசு கொடுக்கனும்னு சொல்றான். உதவிக்கு அக்கம் பக்கம் உள்ள மனுசங்கதான் வரானுங்க.

திரும்பவும் நார்மல் ஆகி தொழில் பண்றான், வேலைக்குப் போறான் சம்பாதிக்கிறான் - மறுபடியும் சபரிமலை, பழனி, திருப்பதி, வேளாங்கண்ணி, மெக்கா.... செலவு பண்றான்... ரிப்பீட்டு.

திரும்பவும் மழை வெள்ளம்... கவர்மண்ட் கவனிக்கலை, காசு தரனும். உதவிக்கு அக்கம் பக்கம் உள்ளவன்தான் வரனும்.... ரிப்பீட்டு.

கேட்டா இயற்கை சீற்றங்கறான் கடைசி வரை இந்த கடவுள் என்ன பண்ணார்னு சொல்லவே மாட்றான்? ●

முகநூல் பதிவு

# தேசிய குறைந்தபட்ச ஊதியம்!

## ஃப்ளோர் லெவல் மினிமம் வேஜஸ்

கீழ்க்காணும் நாடுகளின் பெயர்களுக்கு அடுத்து கொடுக்கப்பட்ட தொகை அந்தந்த நாடுகளின் தொழிலாளர்களுக்கு அந்தந்த நாட்டு அரசுகள் அறிவித்துள்ள ஒரு மணி நேர வேலைக்கான தேசிய குறைந்த பட்ச ஊதியம்.

| | | |
|---|---|---|
| 1. | ஆஸ்திரேலியா | 1130 ரூபாய் |
| 2. | லக்சம்பர்க் | 1130 ரூபாய் |
| 3. | ஜெர்மனி | 1122 ரூபாய் |
| 4. | பிரான்ஸ் | 1122 ரூபாய் |
| 5. | நியூசிலாந்து | 1097 ரூபாய் |
| 6. | பெல்ஜியம் | 1047 ரூபாய் |
| 7. | நெதர்லாந்த் | 997 ரூபாய் |
| 8. | யுனைடெட் கிங்டம் | 980 ரூபாய் |
| 9. | ஸ்பெயின் | 947 ரூபாய் |
| 10. | கனடா | 922 ரூபாய் |
| 11. | அயர்லாந்து | 839 ரூபாய் |
| 12. | ஸ்லோவேனியா | 798 ரூபாய் |
| 13. | தென் கொரியா | 789 ரூபாய் |
| 14. | துருக்கி | 731 ரூபாய் |
| 15. | ஜப்பான் | 706 ரூபாய் |
| 16. | போலந்து | 698 ரூபாய் |
| 17. | லித்துவேனியா | 665 ரூபாய் |
| 18. | போர்ச்சுக்கல் | 615 ரூபாய் |
| 19. | அமெரிக்கா | 602 ரூபாய் |
| 20. | இஸ்ரேல் | 581 ரூபாய் |
| 21. | ரோமானியா | 548 ரூபாய் |
| 22. | செக் குடியரசு | 523 ரூபாய் |
| 23. | க்ரோஷியா | 515 ரூபாய் |
| 24. | ஹங்கேரி | 515 ரூபாய் |
| 25. | கிரீஸ் | 490 ரூபாய் |
| 26. | எஸ்டோனியா | 473 ரூபாய் |
| 27. | ஸ்லோவாகியா | 473 ரூபாய் |
| 28. | லாத்வியா | 399 ரூபாய் |
| 29. | பல்கேரியா | 357 ரூபாய் |
| 30. | கோஸ்ட்டா ரிக்கா | 340 ரூபாய் |

இவை எல்லாம் அந்த நாடுகளில் ஒருமணி நேரம் வேலைக்கான சட்டப்படியான ஃப்ளோர் லெவல் மினிமம் வேஜஸ்.

நமது இந்தியாவின் ஃப்ளோர் லெவல் மினிமம் வேஜஸ் என்னவென்று தெரியுமா?

53 கோடி இந்திய தொழிலாளர்களில் பெரும்பாண்மை தொழிலாளர்கள் இந்துக்கள் தானே.

பி ஜே பி அரசு 2017 ம்ஆண்டு பாராளுமன்றத்தில் முடிவு செய்த குறைந்த பட்ச சம்பளம் அதாவது ஃப்ளோர் லெவல் மினிமம் வேஜ்

176 ரூபாய் ஒரு மணி நேரத்திக்கல்ல. ஒரு நாளைக்கு...

பி ஜே பி யின் பத்தாண்டு கால ஆட்சியில் இந்துக்களுக்காக பாராளுமன்றத்தால் தீர்மானித்துள்ள சம்பளம்:

இது துரோகமா?

இது காவலா?

இது இந்துக்களுக்கான ஆட்சியா?

விரைவில் உலகப் பொருளாதாரத்தில் மூன்றாவது பெரிய நாடாக ஆகுமாம் இந்தியா! ●

கவிதை

# உபயோகமில்லாத பழைய பொருட்கள் வாங்கப்படும்!

- வேணு.ஜெயராமன்



வீட்டில் தேவையற்ற பொருட்கள்
வாங்கப் படும் நல்ல விலைக்கு...
மூன்று சக்கர வாகனத்தில் ஒலிப் பெருக்கிச் சத்தம்
மூடிக் கொண்டு இருக்க கூடாதா வாயை...

ஏதாவது இருக்கா? என்று கேட்டேன்
இருக்கு இப்போது போட வேண்டாம்...
என்றவள் என்னைப் பார்த்தாள்
எனக்குத் தூக்கி வாரிப் போட்டது...

மனதைத் தேற்றிக் கொண்டேன்
வழக்கம் போல வாழ்வியல் தத்துவம்...
மீண்டும் தொடர்ந்து வார்த்தைப் போர்
சும்மா தானே இருக்கீங்க? என்றாள்...

பழி தீர்த்துக் கொண்டாள் இன்று
பதிவு கணக்கீடு வரும் போது...
யார்? யார்? எந்தப் பணி எனும் போது
சும்மா தான் இருக்கிறாள் என்றேனே-
அன்று-அந்த அடி...

சும்மா தான் இருக்கேன் ஆனாலும் இல்லை
நாளொன்று கூடி விட்டால் போதும்....
அன்று நான் பார்த்த உழைப்பின்
விடியலில் ஓர் நாள் ஊதியம் சேரும்...

என்ன முணுமுணுப்பு வாங்க இங்க!
சிக்கினேன் என்று நினைத்தேன்...
"சிக்கன்" வாங்கிவா என்றாள் என்ன?
சின்னத் தம்பியும் பிள்ளைகளும்
வாராங்களாம்...

எனக்கு ஏது? சின்ன தம்பி பெரிய தம்பி
எல்லாமே ஒரே தம்பிகள் தான் என நினைத்து...
இருக்கும் காலத்தை மகிழ்ச்சியுடன்
ஓய்வூதியத்தை உயர்வாக எண்ணிக்
கொண்டேன்...

வாங்க ஆள் இல்லை இந்த உடலை
விற்பது போல இருந்தால் அய்யோ!...
உபயோகமற்ற உடலில் உள்ள சில
உபயோகமான உறுப்புகள் இருப்பது
குற்றம் அதனால்...

உரிமைத் தொகை இல்லை என்றால்
உபயோகம் இல்லாத பொருள் தான்...
உள்ளம் உவகைக் கொள்கிறது
உருகி நகராவை நினைத்து வணங்குகிறது... ●

# பிரதமர் மோடிக்கு காவல்துறை உயர் அதிகாரியின் பதில்!

**- ஜூலியஸ் ரெபரியோ**

60 வருடங்களாக காங்கிரஸ் என்ன செய்தது? என்ற பிரதமர் திரு.மோடி அவர்களின் குற்றச்சாட்டுக்கு...

திரு.ஜூலியஸ்ரெபைரோஓய்வு பெற்ற காவல்துறைஅதிகாரி அவர்களின் பதில்...

Mr. JULIUS REBERIO I.P.S.,Ex Director General of Police - Maharashtra Ex Police Commissioner - Mumbai Ex Director General of Police - Gujarat Ex Director General of Police - Punjab

ஒரு சாதாரண இந்திய பிரஜையாகிய நான் சொல்லிய இவைகள் அவர்களுக்கு போய் சேர வேண்டும்.

மோடிஜி, இப்படி சொல்லுவதை நிறுத்திவிட்டு, 60 வருடங்களில் என்ன சாதித்தோம் என்பதை பாருங்கள். இந்திய பிரஜைகள் எல்லாரும் முட்டாள்கள் இல்லை என்பதை முதலில் உணருங்கள். நீங்கள் பிரதம மந்திரியாக இருக்கும் நம் இந்தியாவை 200 வருடங்களுக்கு மேலாக ஆங்கிலேயன் ஆட்சி செய்தார்கள்.

இந்தியர்கள் அனைவரும் அவனுக்கு அடிமைகளாகத்தான் இருந்தார்கள். 1947 இல் காங்கிரஸ் அரசாங்கம் ஆட்சி ஆரம்பித்தபோது ஆங்கிலேயன் துடைத்து வைத்துவிட்டுப்போன பூஜ்யமான பொருளாதாரம்...ஆங்கிலேயன் விட்டுப்போன குப்பைகளைத்தவிர வேறு ஏதுமில்லை.

ஒரு பின் தயாரிக்கக்கூட எவ்விதமான வசதியையும் அவன் விட்டுவிட்டு போகவில்லை. இந்தியா முழுவதுமாக 20 கிராமத்தில் மட்டுமே மின்சார வசதி. 20 அரசர்களுக்கு மட்டுமே தொலைபேசி. குடிதண்ணீர் கிடையாது. நாடு முழுதும் 10 சிறிய அணைக்கட்டுகள். ஒரு மருத்துவமனையும் கிடையாது. ஒரு கல்வி நிறுவனம் கிடையாது, விவசாயத்திற்கு நீர் வசதி, பயிர்களுக்கு பூச்சி மருந்து எதுவுமே கிடையாது. வேலைகள் கிடையாது.

பசி பஞ்சம் தான் நாட்டில். பிஞ்சுக் குழந்தைகள் கொத்துக்கொத்தாக மரணம். எல்லையில் மிக சிறிய அளவில் இராணுவ அதிகாரிகள். 4 போர் விமானங்கள். 20 பீரங்கிகள்.நாட்டின் நான்கு எல்லைகளும் திறந்த நிலை.

குறைவான அளவில் சாலைகள் மற்றும் பாலங்கள். காலியான கருவூலங்கள். இந்த நிலையில்தான் நேரு பதவியேற்றார்.

60 வருடங்கள் கழித்து இந்தியா? உலகில் மிகப்பெரிய இராணுவ சேவை. ஆயிரக்கணக்கில் போர் விமானங்கள், பீரங்கிகள், இலட்சக்கணக்கான தொழில்நுட்ப ஸ்தாபனங்கள். அனைத்து கிராமங்களிலும் மின் வசதி.நூற்றுக்கணக்கான மின்சார உற்பத்தி நிலையங்கள். இலட்சக்கணக்கான கிலோ மீட்டர்கள் சாலைகள் மற்றும் பாலங்கள்.

புதிய இரயில் நிலையங்கள். ஸ்டேடியங்கள். சூப்பர் ஸ்பெஷாலிட்டி ஆஸ்பத்திரிகள். அனைத்து பிரஜைகள் இல்லங்களில் தொலைக்காட்சி மற்றும் தொலைபேசி. இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் வேலைசெய்ய கட்டமைப்பு.

வங்கிகள். பல்கலைக்கழகங்கள் AIIMS. IIMS.அணு ஆயுதங்கள். நீர்மூழ்கி கப்பல்கள். அணு ஆயுத ஆராய்ச்சி நிறுவனங்கள். விண்வெளி அறிவியல் ஆராய்ச்சி நிலையம்.

பொதுத்துறை நிறுவனங்கள். பல வருடங்களுக்கு முன்பே இந்திய இராணுவம் லாகூர் வரை சென்று, பாகிஸ்தான் நாட்டை இரண்டாக ஆக்கியது.

அப்போது ஒரு இலட்சத்திற்கும் மேலான பாகிஸ்தான் நாட்டவர்கள் நம்மிடம் சரணடைந்தது. இந்தியாவிலிருந்து உணவுப்பொருட்கள் மற்றும் கனிம வளங்களை ஏற்றுமதி செய்தது.

வங்கிகள் அனைத்தையும் தேசிய உடைமை ஆக்கியது இந்திரா காந்தி. கணினி அறிமுகம். அதன் மூலம் உள்நாட்டிலும், அயல்நாடுகளிலும் அதிக வேலை வாய்ப்புகள்.

மோடிஜி! நீங்கள் ப்ரதான் மந்திரி ஆனது இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி மூலம். நீங்கள் ஆட்சி அமைக்கும்போது இந்தியா பொருளாதார நாடுகளின் உலக அளவில் முதல் 10 இல்.

இதைத் தவிர GSLV. மங்கள்யான். மெட்ரோ ரெயில். மோனோ இரயில். பன்னாட்டு வானூர்தி நிலையங்கள். ப்ரித்வி ஏவுகணை. அக்னி ஏவுகணை. நாக் ஏவுகணை. அணு ஆயுதங்கள் தாங்கிய நீர்மூழ்கிக் கப்பல்கள்.இவைகள் அனைத்தும் நீங்கள் பிரதமராவதற்கு முன்பே சாதிக்கப்பட்டு விட்டது. தயவுசெய்து நீங்கள் மக்களிடம் வந்து 60 வருடங்களில் காங்கிரஸ் ஒன்றும் செய்யவில்லை என்று சொல்லாதீர்கள்.

கடந்த 9 ஆண்டுகளில் நீங்கள் என்ன செய்தீர்கள் என்று சொல்லி வாக்கு கேளுங்கள்.

பெயர்கள் மாற்றம். சிலை அரசியல். மாட்டு அரசியல். தோல்வியுற்ற பண மதிப்பு இழப்பு (Demonetization). அனுபவில்லாமல் செயல்பட்ட GST. மக்களை வெயிலிலும், மழையிலும் வரிசையில் நிற்க வைத்து அவர்களது பணத்தை எடுக்க முடியாத நிலைக்கு தள்ளியது.

பா.ஜ க எதிர்கட்சியாக இருக்கும்போது எதிர்த்த, வெளிநாட்டு நேரடி பண முதலீடுகளை, இப்போதுவெட்கமில்லாமல் ஆதரிப்பது...நாட்டை அம்பானிகளுக்கும், அதானிகளுக்கும் விற்றது, அம்பானியின் இரண்டு மாத கம்பெனிக்கு ரஃபேல் விமான ஆர்டரை கொடுத்து.

இந்திய நிறுவனம் ஹிந்துஸ்தான் ஏரோனாட்டிக்ஸ் ஐ செயலிழக்க செய்தது. BSNL நிறுவனத்தை மூடுவதற்கு அம்பானியின் ஜியோ மூலமாக செயல்படுவது.

குருட் ஆயில் (கச்சா எண்ணெய்) மிகக்குறைந்த விலையில் கிடைக்கும்போது பெட்ரோலும் டீசலும், எரிவாயுவையும் அதிக விலைக்கு விற்குமளவிற்கு வரிகள். ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் கணக்கு வைத்திருந்தஏழை, நடுத்தர மக்களின் பணமான ரூ 1,771 கோடிகளை, மினிமம் பேலன்ஸ் வைக்காமல் இருப்பதாக சொல்லி தண்டத்தொகை.

சப்கே-சாத், சப்கோ-விகாஸ் யாருக்கு என்றால் அமித்ஷா, அவரின் மகன் சவுரியா தோவல், அம்பானி, அதானி, பாபா ராம்தேவ் பதஞ்சலி குழுமம் மற்றும் பா.ஜ.க வின் ஸ்பான்சர்கள்.

கங்கை நதியை தூய்மைப்படுத்த ரூ 3,000 கோடிகள். கங்கையில் குளிக்கச் செல்லும் ஒவ்வொருவருக்கும் தெரியும் இந்த பணம் எங்கே என்று இது காங்கிரஸ் கட்சிக்கு விளம்பரமல்ல. ஒவ்வொரு முறையும் 60 ஆண்டுகள் ஒன்றும் நடக்கவில்லை.. என்று சொல்லும்போது என்னுடைய பகுத்தறிவு ஏற்க மறுக்கிறது...

●

# கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றக்கோரி அமைச்சர் துரைமுருகன் அவர்களிடம் கோரிக்கை மனு!

**ஜாக்டோ-ஜியோவின் போராட்ட அறிவிப்புகளில் ஒரு நிகழ்வாக அரசியல் கட்சி தலைவர்களை நேரில் சந்தித்து கோரிக்கை மனுவில் கொடுக்கும் முடிவின்படி 5.2.2024 அன்று மாண்புமிகு அமைச்சர் திரு. துரைமுருகன் (தி.மு.க) அவர்களே நேரில் சந்தித்து கொடுத்த கோரிக்கை மனு.**

ஆசிரியர்கள் - அரசு ஊழியர்கள் - அரசுப் பணியாளர்கள் என அனைத்து அரசுத் துறைகளில் பணியாற்றும் சுமார் 10 லட்சம் உறுப்பினர்களைக் கொண்டுள்ள ஜாக்டோ ஜியோ இயக்கத்தின் சார்பில், பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழக அரசின் நிர்வாகமும், மக்கள் நலத்திட்டங்களும் தொய்வின்றி சிறப்பாக தொடர்ந்து நடைபெற அரசு ஊழியர்கள் பணியாளர்களின் பங்களிப்பும், வருங்காலத்தின் வளமான தமிழகத்தை வகுப்பறையில் உருவாக்க ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும் இன்றியமையாதவை ஆகும். ஆனால் கடந்த இருபது ஆண்டுகளாக நாங்கள் அனைவரும் எங்களுடைய வாழ்வாதார உரிமைகளுக்காக தொடர்ந்து போராட வேண்டிய சூழ்நிலைகக்கு ஆளாகியிருக்கிறோம்.

2011ஆம் ஆண்டு அதிமுக ஆட்சிக்கு வந்த பிறகும் சரி, அந்த ஆட்சி 2016ல் தொடர்ந்த பின்னரும் சரி, எங்களின் உரிமைகளும், சலுகைகளும் நிறுத்தி வைக்கப்பட்டும், பறிக்கப்பட்டும் தொடர்ந்து எங்கள் வாழ்வாதாரங்கள் நசுக்கப்பட்டும் வந்துள்ளன. அரசு ஊழியர்கள், அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்களுக்கான புதிய உரிமைகளோ, சலுகைகளோ இந்த காலகட்டங்களில் பெரிய அளவில் வழங்கப்படவில்லை. 2003ஆம் ஆண்டு இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழகத்தில் புதிய ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்திய ஜெயலலிதா அம்மையார் அவர்கள் மனம்மாறி, 2011ல் தான் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் பழைய ஓய்வூதியத் திட்டத்தை தொடர்வதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து செயல்படுத்துவதாக தேர்தல் அறிக்கையிலும், தேர்தல் பிரச்சாரத்திலும் தெரிவித்திருந்தார்.

ஆனால் அவர் 2011ல் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தபோதும், அவருடைய ஆட்சியே 2016ல் தொடர்ந்த போதும் அரசுப் பணியாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் கோரிக்கைகள் எல்லாம் கிடப்பில் போடப்பட்டிருந்தன. எங்கள் வாழ்வாதாரங்களுக்கான நியாயமான போராட்டங்களை நாங்கள் தொடர்ந்தபோது அதிமுக ஆட்சியின் முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்டிருந்த திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் எந்த முதல்வரும் செய்யத் துணியாத காரியத்தை செய்தார். அவர் அரசு ஊழியர்கள், பணியாளர்கள், ஆசிரியர்களாகிய எங்களுடைய கோரிக்கைகளை ஒரு பொருட்டாகக் கூட மதிக்காததோடு, எங்களை நேரில் சந்தித்து எங்கள் முறையீடுகளை கேட்பதற்குக் கூட மனமில்லாதவராக அரசு ஊழியர்கள், அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களை உதாசீனப்படுத்தினார்.

அந்த நேரத்தில் தான் எங்களுடைய உணர்வுகளை உணர்ந்தவராக, எங்களின்

கோரிக்கைகளின் பால் உள்ள நியாயங்களை புரிந்தவராக தமிழ்நாடு சட்டமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் எங்கள் கூட்டங்களுக்கும், கருத்தரங்கங்களுக்கும், மாநாடுகளுக்கும் வந்து எங்களை ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்தியதோடு மட்டுமல்லாமல் `ஆட்சிக்கு வந்ததும் அரசு ஊழியர் ஆசிரியர் கோரிக்கைகள அனைத்தையும் நிறைவேற்றுவதாக' வாக்குறுதி அளித்தார். எங்களின் நம்பிக்கைகள் மேலும் உறுதிபடும் வகைளில் 2021 தேர்தல் அறிக்கையில் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான உரிமைகளும் சலுகைகளும் திமுக ஆட்சிக்கு வந்ததும் வழங்கப்படும் என்றும் குறிப்பாக புதிய ஓய்வூதியத் திட்டம் ரத்து செய்யப்பட்டு பழைய பயனளிப்பு ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் உறுதி அளித்தார். எங்களின் முக்கிய வாழ்வாதார கோரிக்கைகளாவன

- 1.4.2003க்குப் பிறகு அரசுப்பணியில் சேர்ந்தோருக்கு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தினைக் கைவிட்டு, பழைய ஓய்வூதியத் திட்டத்தினையே அமல்படுத்திட வேண்டும்.
- காலவரையின்றி முடக்கி வைக்கப்பட்டுள்ள சரண் விடுப்பு ஒப்படைப்பு, உயர் கல்விக்கான ஊக்க ஊதிய உயர்வு ஆகியவற்றை உடனடியாக வழங்கிட வேண்டும்.
- இடைநிலை ஆசிரியர்களுக்கு, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி த்மையாசிரியர்களுக்கு, உடற்கல்வி இயக்குநர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு ஒன்றிய அரசுக்கு இணையான ஊதியம் வழங்கப்படாமல் இழைக்கப்பட்டு வரும் அநீதி களையப்பட வேண்டும்.
- தொடக்க கல்வித்துறையில் பணிபுரியும் 90 சதவீதத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் வகையில் வெளியிடப் பட்டுள்ள பள்ளிக் கல்வித்துறை அரசாணை எண்.243 நாள்:21.12.2023ஐ உடனடியாக ரத்து செய்திட வேண்டும்.
- முதுநிலை ஆசிரியர்கள், அனைத்து ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், அரசுப் பணியாளர்கள், கண்காணிப் பாளர்கள், தலைமைச் செயலகம் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், களப்பணியாளர்கள், பல்வேறு துறைகளில் உள்ள தொழில்நுட்ப ஊழியர்கள், ஊர்தி ஓட்டுநர்கள், ஆகியோருக்கான ஊதிய முரண் பாட்டினைக் களைய வேண்டும். கல்லுhரி பேராசிரியர்களுக்கான நிலுவையிலுள்ள பணிமேம்பாடு (ஊஹளு) ஊக்க ஊதிய உயர்வு உடனடியாக வழங்கிட வேண்டும். உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களை பட்டதாரி ஆசிரியர்களாக உயர்த்த வேண்டும்.
- சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் சத்துணவு, அங்கன்வாடி வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நுhலகர்கள், கல்வித்துறையில் பணியாற்றும் துப்புரவுப் பணியாளர்கள், தொகுப்பு ஊதியத்தில் பணியாற்றும் ஆசுசுஷ செவிலியர்கள், சிறப்பு ஆசிரியர்கள், பல்நோக்கு மருத்துவமனைப் பணியாளர்கள் ஆகியோருக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட வேண்டும். மேலும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித்துறையில் பணியாற்றும் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் பகுதிநேர ஆசிரியர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும்.
- அரசின் பல்வேறு துறைகளில் 30 விழுக்காட்டிற்கு மேலாக காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பிடுவதற்கான

நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

- 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகை அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் - அரசுப்பணியாளர்கள் ஆகியோருக்கு மறுக்கப்பட்டுள்ளதை உடனடியாக வழங்கிட வேண்டும்.
- 2002 முதல் 2004 வரை தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்களின் பணிக் காலத்தினை அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் பணி வரன்முறைப்படுத்தி ஊதியம் வழங்கிட வேண்டும்
- சாலைப்பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தினை முறைப்படுத்த வேண்டும்.

திமுகவின் தலைவர் தமிழ்நாட்டின் முதலமைச்சரான பின்னர் கடந்த இரண்டரை ஆண்டு காலமாக எங்களின் வாழ்வாதாரக் கோரிக்கைகளை நிறைவேற்றாமல் தாமதித்து வருவது அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதோடு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்துவதாகவும் மாறியுள்ளதாக நாங்கள் உணர்கிறோம். மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது கொரோனா காலகட்டமாக இருந்ததால் நாங்கள் எங்கள் கோரிக்கைகளை முன்னிலைப் படுத்தாமல் மௌனம் காத்தோம்.

சில காலம் கடந்து நிதிநிலை சரியில்லை அது சரியானதும் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என ஆறுதல் கூறப்பட்டது அமைதி காத்தோம். எங்கள் ஜாக்டோ ஜியோ மாநாட்டில் கலந்து கொண்டு, 'சொன்னவை அனைத்தும் நினைவில் உள்ளது. நிச்சயம் அவை நிறைவேற்றப்படும்' என்று தமிழக முதல்வர் மீண்டும் ஒருமுறை தான் கொடுத்த வாக்குறதியை உறுதி செய்தார். இறுகிய மனதோடு நம்பிக்கையோடு காத்திருக்கிறோம்.

நாங்கள் இரண்டுமுறை போராட்டங்களை முன்னெடுத்தபோது மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தமிழக அரசின் பிரதிநிதிகளாக எங்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி 'முதல்வர் கூடிய விரைவில் உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுவார்.' என்று சொல்லிச் சென்றார்கள். நாங்களும் நம்பிக்கை இழக்காமல் காத்திருந்தோம். ஆனாலும் இதுவரையிலும் எங்கள் கோரிக்கைகள் ஒன்று கூட நிறைவேற்றப்படாமல் இருப்பதானது ஒவ்வொரு ஆசிரியர், அரசு ஊழியர் மற்றும் அரசுப் பணியாளரிடத்தில் இதுவரை முதல்வர் சொல்லி வந்திருக்கும் உறுதிப்பாடு மற்றும் வாக்குறுதிகளின் மீது நம்பகமற்றத் தன்மையையும், மன உளைச்சலையும் ஏற்படுத்தியுள்ளது. அதனால்தான் எங்கள் உணர்வுகளை அழுத்தமாக முதல்வருக்கு தெரிவிக்கும் பொருட்டு 2023 டிசம்பர் 28ம் ஆம் தேதி கோட்டை முற்றுகைப் போராட்டத்தை நடத்தினோம். அதன்பிறகும் மாண்புமிகு முதல்வரிடமிருந்து எந்தவித சமிஞ்சையும் இல்லாமலிருப்பது மிகுந்த வேதனையளிப்பதாக உள்ளது.

எங்கள் கோரிக்கைகளில் மேற்கண்ட முக்கிய கோரிக்கைகளையாவது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நிறைவேற்றி ஆணையிடுவார் என்ற எதிர்பார்ப்புகள் தற்போது அவநம்பிக்கையாக மாறி நாங்கள் ஏமாற்றத்தின் விளிம்புக்கு தள்ளப்பட்டுள்ளோம். கடந்த ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரின் நிதிநிலை அறிக்கையில் அரசு ஊழியர்கள் சம்பந்தப்பட்ட அறிவிப்புகளில் நாங்கள் முன்வைத்துள்ள முக்கிய வாழ்வாதார கோரிக்கைகளில் ஒன்றைக்கூட கருத்தில் கொள்ளாமல் அரசுப்பணியில் உள்ள ஊழியர்கள் வீடுகட்ட

அனுமதிக்கப்பட்டிருந்த நிதிவரம்பு ரூ.40 லட்சத்திலிருந்து ரூ.50 லட்சமாக உயர்த்தப்பட்டிருப்பதாக கடனை உயர்த்தும் அறிவிப்பு மட்டும் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல் அறிக்கையில் கொடுத்துள்ள வாக்குறுதிகளில் 86 சதவீத வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தேர்தல் அறிக்கையில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் அரசுப்பணியாளர்களின் கோரிக்கைகளில் ஒன்றைக்கூட நிறைவேற்றாதது அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மற்றும் அரசுப்பணியாளர்கள் அனைவரையும் ஏமாற்றத்தில் ஆழ்த்தி யுள்ளதோடு எதிர்கால வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்கிவிடுமோ என்ற அச்ச உணர்வையும் ஏற்படுத்தியுள்ளது.

எனவே நாங்கள் தங்கள் போன்ற தலைவர்கள் மூலம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் அரசுப் பணியாளர்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை தங்கள் மூலம் நினைவூட்டல் செய்து, அவர் தேர்தல் அறிக்கையில் கொடுத்த உறுதிமொழிகளை, எங்கள் வாழ்வாதார கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்திட பெற்றுத் தந்திட தங்களாலான முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டி கேட்டுக் கொள்கிறோம். மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்தை ஈர்க்கவும், எங்கள் கோரிக்கைகளின்பால் மாண்புமிகு முதல்வர் மனமிரங்கி கோரிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டு நாங்களும் அவருக்கு கோரிக்கைகளை நினைவூட்டும் பொருட்டு கீழ்க்கண்ட தொடர் போராட்டங்களை நடத்த தீர்மானித்து இருக்கிறோம்.

**போராட்ட நிகழ்வுகள் அட்டவணை**

1. *22.01.2024 முதல் மூன்று நாட்கள் மாநிலம் முழுவதும் கோரிக்கைகளை வலியுறுத்தி 24.01.2024 வரை ஆசிரியர், அரசு ஊழியர் சந்திப்புப் பிரச்சார இயக்கம் நடத்துவது.*
2. *30.01.2024 அன்று மாவட்டத் தலைநகரங்களில் மறியல் போராட்டம் நடத்துவது.*
3. *05.02.2024 முதல் 09.02.2024 வரை அரசியல் கட்சித் தலைவர்களைச் சந்தித்து ஆதரவு கோருவது.*
4. *10.02.2024 அன்று மாவட்ட அளவில் வேலை நிறுத்த போராட்ட ஆயத்த மாநாடு நடத்துவது.*
5. *15.02.2024 அன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் நடத்துவது.*
6. *26.02.2024 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் நடத்துவது*

எனவே எங்களுடைய இருபது ஆண்டுகால நிலுவை கோரிக்கைகளின்பால் உடனடியாக நடவடிக்கை எடுத்து, மாண்புமிகு தமிழக முதல்வர் தனது தேர்தல் அறிக்கையில் தெரிவித்துள்ளவற்றில் முக்கியமான வாழ்வாதார கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றித் தந்திட தாங்கள் நிச்சயம் முயற்சி செய்வீர்கள் என்று திடமாக நம்புகிறோம். தங்களின் முன்னெடுப்பின் மூலம் எங்கள் கோரிக்கைகளில் சிலவற்றையாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக நிறைவேற்றித்தருவார் என்ற நம்பிக்கை உள்ளது.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், அரசுப்பணியாளர்கள் என அனைத்துத் தரப்பினரும் ஒன்றுசேர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் தமிழக மக்களுக்கு மிகுந்த அசௌகரியம் ஏற்படும் என்பதையும் அதை தவிர்க்கும் விதமாக தாங்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சரிடம் எங்களின் நீண்டகால, நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி அவற்றை உடனடியாக நிறைவேற்றி, திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் அரசுப்பணியாளர்களின் பாதுகாவலனாக எப்போதும் இருக்கும் என்பதை இன்னொரு முறை நிகழ்த்திக் காட்டிடக் கேட்டுக்கொள்கிறோம். ●

# கொல்கத்தாவில் நடைபெற்ற 18-வது தேசிய கவுன்சில்

**- மு. பாஸ்கரன்**

சென்னையில் வரலாற்று சிறப்பு மிக்க ஜாக்டோ-ஜியோ சார்பில் கோட்டை முற்றுகை போராட்டம் நடைபெற்ற அதே தினத்தில் மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் அகில இந்திய தேசிய கவுன்சில் கூட்டம் மிக சிறப்பாகவும் எழுச்சியுடனும் துவங்கியது. அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் நிர்வாகிகள் மற்றும் தேசிய செயற்குழு உறுப்பினர்களை உள்ளடக்கி மொத்தம் 41 பேர் பங்கேற்க வாய்ப்பு இருந்தும் 31 பிரதிநிதிகள் மட்டுமே பங்கேற்றனர்.

**தேசிய கவுன்சில்**

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளத்தின் தேசிய கவுன்சில் 28.12.2023 அன்று அமைப்பின் கொடியினை ஏற்றி, தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தி மிக கம்பீரத்துடன் தேசிய கவுன்சில் கூட்டம் தங்கும் இடத்திற்க்கு அருகாமையில் சால்ட் லேக் சிட்டியில் அமைந்திருந்த ஈஸ்டாம் ஜோனல் கல்சுரல் சென்டரில் துவங்கியது, வரவேற்பு குழுவின் சேர்மேன் Dr. Fuad Halion அவர்கள் வரவேற்று பேசும் போது கொல்கத்தா நகரம் மினி இந்தியா என்றும் சால்ட் லேக் சிட்டி உலகம் முழுவதும் அறிந்த நகரம் என்றும், உலகம் முழுவதும் தெரிவதற்க்கு 19 ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற துடிப்புமிக்க சுதந்திர போராட்ட நிகழ்வுகளே காரணம் எனவும் ஜாதி/மத பேதமின்றி அனைவரையும் வரவேற்கும் மாநிலமாக இன்றும் திகழ்ந்து வருகிறதாகவும், அப்படிப்பட்ட மண்ணில் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் தேசிய கவுன்சில் கூட்டம் நடைபெறுவதை சுட்டி காட்டினார். மேலும் இம்மண்ணில் 1965-ல் நடைபெற்ற முதல் National Conference அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் என்கின்ற மாபெரும் அமைப்பு முழுமை வடிவம் பெற முழு காரணம் அமைந்ததாகவும், அதனைத் தொடர்ந்து 1978-ல் நடைபெற்ற National Conference, 1993 ஆம் ஆண்டு நடைபெற்ற National Conference, 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற 12 வது National Conference சிறப்பை பற்றியும் குறிப்பிட்டு எந்த நோக்கத்திற்காக இன்று துவங்கியுள்ள 18-வது தேசிய கவுன்சில் கூட்டம் நடைபெறுகிறதோ அந்நோக்கம் நிறைவேர வாழ்த்தி வரவேற்புரை திகழ்த்தினார். தொடர்ந்து அகில இந்திய பொது செயலாளர் ஸ்ரீகுமார் அவர்கள் சமர்ப்பித்த அறிக்கையின் மீதான விவாதங்கள் நடைபெற்றது. மாநில பொருளாளர் மு. பாஸ்கரன், திருவள்ளூர் மாவட்ட தோழர். வெண்ணிலா, தர்மபுரி மாவட்ட செயலாளர் தோழர். சேகர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் தோழர் ஜெகதாம்பிகா ஆகியோர் தமிழகத்தின் சார்பில் விவாதத்தில் பங்கேற்றனர்.

**பிரதிநிதிகள் தங்கும் இடம்/ உணவு கூட்டம்**

இந்தியா முழுவதிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகளை யுபபாரதி கிரி ரங்கள்

சால்ட் லேக் சிட்டியில் நவபிரஜன்மா எஸ்டேட் யூத் ஆஸ்டலில் மிகப்பெரிய ஸ்டேடியத்தின் ஒரு பகுதியில் (விளையாட்டு வீரர்கள் தங்கும் விடுதி) அனைவரும் ஒரே இடத்தில் தங்குவதற்கு வரவேற்பு குழு நல்ல ஏற்பாட்டினை செய்திருந்தனர். உணவு அருந்தும் இடம் சிறியதாக இருந்தாலும் ஒழுக்க கட்டுப்பாட்டுடன் பிரதிநிதிகள் வரிசையில் நின்று உணவு பெற்றதும், வரவேற்பு குழுவிற்கு எந்த சிரமத்தையும் தராமல் பிரதிநிதிகள் தேவையான உணவினை பெற்றுகொள்ள பஃபே முறை ஏற்பாடு செய்திருந்தனர்.

### தேசிய கவுன்சில் அனுபவம்...

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் தேசிய கவுன்சில் எழுச்சியோடும் அமைதியாகவும் நடைபெற்றது குறிப்பாக வரவேற்பு குழுவில் இடம் பெற்றிருந்த தொண்டர் குழுவினர்கள் எண்ணிக்கை நாம் நடத்தும் மாநாடு/ பேரவைகளுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான தொண்டர் குழுவினர் இருந்தனர். நமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியதோடு, இந்தியா முழுவதிலிருந்து பங்கேற்றிருந்த பிரதிநிதிகள் கட்டுபாட்டுடன் அரங்கத்திலும், உணவு கூடத்திலும் தொண்டர் குழு தேவையின்றி மூன்று நாட்களும் பிரதிநிதிகள் அமைதியாகவும் சலசலப்பின்றியும் நிகழ்ச்சிக்கு இடையூறுன்றி மாநாடு வெற்றியடை செய்தது ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. 28 மற்றும் 29 ஆம் தேதி இரவு நடைபெற்ற வங்க மொழி கலை நிகழ்ச்சிகள் கொல்கத்தா நகர மக்களின் தனித்தன்மையும் திறமையினையும் வெளிப்படுத்துவதாக அமைந்ததோடு சிறந்த ஸ்தாபன கருத்தினையும் ஒற்றுமையினையும் வலியுறுத்தப்பட்டது. 31 ஆம் தேதி பிற்பகல் அரைகூவல் தீர்மானம் இயற்றி கவுன்சில் நிறைவு பெற்றது.

### அரைகூவல் தீர்மானம்

இந்தியாவில் சகல விதமான மக்களுக்கும், மத்திய, மாநில அரசு ஊழியர்கள், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் விரோத கொள்கையினை தீவிரமாக அமல்படுத்தி பெரும் பணக்காரர்களை மேலும் பணக்காரர்களாக மாற்றியும் ஏழைகளை மேலும் ஏழைகளாகியும் கடந்த 10 ஆண்டுகால பாரதிய ஜனதா ஆட்சியினை வரும் பராளுமன்ற தேர்தலில் தூக்கி எரிவதற்கான எதிர்பினை பதிவு செய்யும் விதமாக பிப்ரவரி மாதத்தில் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் மேற்கொள்வது என முடிவெடுக்கப்பட்டது.

### காளி கோயில் அருகில் காவல் அலுவலரின் பணி

தேசிய கவுன்சில் முடிவடைந்த அன்றைய தினம் இரவே அனைவரும் சென்னை திரும்ப முன்பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில் டிக்கட் பதிவு உறுதியாகாத காரணத்தால் மறுநாள் 31.12.2023 அன்று பிற்பகல் புறப்பட வேண்டிய சூழல் ஏற்பட்டதால் பிரதிநிதிகள் தங்குவதற்கு ஒதுக்கப்பட்ட அறையில் தங்கி அடுத்த நாள் காலை ஒரு மினி பஸ் ஏற்பாடு செய்து கொண்டு 18 தோழர்களும் கல்கத்தா காளி கோயில் சென்றோம். அங்கு மக்களின் நீண்ட வரிசையை கண்ட போது கோயிலுக்குள் சென்று வருவதற்கு பலமணி நேரம் செலவழிக்க வேண்டியதாக இருக்கும் என்பதால் ஒரு தயக்கம் ஏற்பட்டது, கோயிலின் அருகில் இருந்த Police Booth -ல் சில காவல் ஆய்வாளர் நிலையிலும் காவலர் நிலையில் இருந்தவர்களிடம் அணுகி எங்களை அறிமுகப்படுத்தி கொண்டோம். அங்கிருந்த காவல்

ஆய்வாளர் தமிழகத்தில் தற்போது வழங்கப்பட்டு வரும் அகவிலைபடி பற்றியும் கவுன்சில் கூட்டம் பற்றியும் தோழர்கள் பணிபுரிய கூடிய துறை பற்றியும் வினவினார். பின்னர் நாங்கள் கோயிலுக்குள் போக வேண்டும் என்பதை பற்றியும் தெரிவித்தோம். உடனடியாக உரிய ஏற்பாட்டினை செய்து தருகிறேன் என்று சொல்லி ஒரு காவலரை நம் தோழர்களுடன் அனுப்பி வைத்தார். கோவிலுக்கு சென்ற சில தோழர்கள் 10 நிமிடத்தில் திரும்ப வந்தனர். அடுத்த சுற்றுலா தளமான விக்டோரியா மஹாலில் சென்று பார்ப்பதற்க்கும் ஏதுவாக இருந்தது.

**இரயில் பயணத்தை பற்றி...**


மகளிர் பிரதிநிதிகள் 2 பேர் உட்பட மொத்தம் 21 தோழர்கள் டிசம்பர் 26 ந்தேதி தாம்பரம் இரயில் நிலையத்திலிருந்து புறப்பட்ட இரயிலில் தோழர்கள் கொடி மற்றும் பேனர் பிடித்து உற்சாக கோசமிட்டு புறப்பட்டோம். பெரும்பாண்மையான தோழர்கள் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் அகில இந்திய மாநாட்டிற்கு முதல் முறையாக பங்கேற்க கூடியவர்களாகவும் குறிப்பாக 11 தோழர்கள் வயது 32 முதல் 45 வயதுக்குட்பட்டவர்களாக பங்கேற்றதும் தமிழகத்தின் சிறப்பாக பார்க்க முடிந்தது.

27-ந்தேதி காலை தோழர்கள் கொண்டு வந்த உணவை அனைவரும் பகிர்ந்து சிற்றுண்டி முடித்தோம். தோழர்கள் பேசிக்கொண்டிருந்த நேரத்தில் தலைமை பண்பும் என்கின்ற வார்த்தையை தோழர் ஒருவர் குறிப்பிட்ட போது ஒரு ஏஸ்தாபணம் நீடித்த நிலையான வளர்ச்சிக்கு "தலைமைப்பண்பும்" அவசியம் என்பதால் தலைமைப் பண்பு பற்றி தோழர்களை பேச வைக்கலாம் என்ற எண்ணம் தோன்றியது. அனைவரும் ஒரே இடத்தில் குழுமினோம். ஒவ்வொருவராக தலைமை பண்பு பற்றி அவரவர்களுக்கு தெரிந்த கருத்தினை பதிவு செய்ய வைத்தோம். அனைவரும் சிறப்பாக கருத்தினை பதிவு செய்தார்கள். ஒட்டு மொத்த கருத்தையும் தோழர்கள் உள்வாங்கியதும் இந்த கருத்து பரிமாற்றத்தினால், ஊழியர்களிடையே நெருக்கத்தையும், தோழமை உணர்வையும் மேலோங்க செய்ததையும் அது மட்டுமல்லாமல் நிகழ்சி முடிந்து 1 ஆம் தேதி பிற்பகல் சென்னை சென்ரல் இரயில் நிலையம் திரும்பும் வரை தோழர்கள் ஒற்றுமையுடன் மகிழ்சியுடனும் இருந்தனர். இந்நிகழ்வு ஸ்தாபனத்திற்கு பயனுள்ளதாகவும் வலிமை சேர்பதாகவும் அமையும் என நம்புகிறோம்.

●

## “ பஞ்ச் ”

மொரப்பா



**“ராமர் பிறந்த இந்தியாவில் பெட்ரோல் விலை ரூ.93,**

**சீதா பிறந்த நேபாளத்தில் பெட்ரோல் விலை ரூ.53,**

**ராவணன் ஆண்ட இலங்கையில் பெட்ரோல் விலை ரூ.51 !!**

**– சுப்ரமணியன் சுவாமி ட்வீட்**


# எரியும் பூந்தோட்டம்!

**- வினோதினி செல்வராஜ்**

எரியும் பனிக்காடு என்ற மிகச்சிறந்த புத்தகம் ஒன்று உண்டு. மலைகளில் தேயிலை எஸ்டேட்டில் வேலை செய்யும் அவல நிலை குறித்து. அதில் வரும் கதாப்பாத்திரங்களை நினைத்தால் அதே புத்தகத்தில் வரும் அட்டைப் புழுக்களை விட கொடுமையாக இருப்பர். அது புத்தகம் மட்டுமல்ல. இன்னும் அந்த மக்கள் பயணித்துக் கொண்டிருக்கும் வாழ்க்கைச் சூழல். சரியான உணவு கல்வி மருத்துவம் ஏதுமில்லாமல் தேயிலைத் தோட்டத்திலேயே கூலி வேலை பார்த்து கால் வயிற்றை நிரப்பும் செயல்கள் தான் அனுதினமும் நடந்தேறுகின்றன. நோய் வந்தால் கூட மருத்துவர்களை அழைத்து வராமல் பாதிரியார்களை வரவழைத்து பிரசங்கம் செய்வது என படிப்பறியாத ஆட்கொண்டனர்.

மக்களை எதையெல்லாமோ அதிக உடல் உழைப்பு. வட்டிக்கு காசு அதிகம் வாங்கியுள்ளதாக கூறி வாங்கும் சிறு ஊதியத்தையும் பிடுங்கி விடுவார்கள். இப்படி இந்த எஸ்டேட்களில் சிக்கி தப்பிக்க முயன்று அப்படியே இறந்து போன சம்பவங்களும் அரங்கேறியது. பிறகு தொழிலாளர் சங்கம், தோட்டத் தொழிலாளர்கள் சங்கம், மலைவாழ் மக்கள் சங்கம் என சங்கங்கள் தலையிடவே கொஞ்சம் மாற்றம் கண்டுள்ளதாக நான் உணர்கிறேன். நேரில் சென்று பார்த்ததில்லை. புத்தகத்தில் வாசித்த நியாபகம். இந்த எரியும் பனிக்காடு புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டே இயக்குனர் பாலா பரதேசி என்ற படத்தை இயக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போது நான் பேசும் புத்தகம் எரியும் பூந்தோட்டம். எரியும் பூந்தோட்டம் என்றதுமே முதலில் தெரியும் பனிக்காடு தான் ஞாபகத்தில் வந்தது. பூந்தோட்டமும் எரியத் தான் செய்கிறது. தெலுங்கில் சாகித்திய அகாதமி விருது வாங்கிய புத்தகம். தமிழ் மொழிபெயர்ப்பு. அழகான மனைவி இன்பமாய் இரு பிள்ளைகள் என மிடில் கிளாஸ் வாழ்க்கை நடத்தி வரும் மிஸ்டர் குமார் தனது பணி நிமிர்த்ததின் காரணமாக சென்னை செல்கிறார். எதேர்ச்சியாக சுதீராவை சந்திக்கிறார்.

மிக மிக அழகான துடிப்பான வித்தியாசமான கண்ணோட்டங்களை கொண்ட கல்லூரி காதலி. கல்லூரியில் படிக்கும் போது அவள் மேல் காதல் கொள்ள இல்லை கா காதல் கொண்டவர்களில் நானும் (குமார்) ஒன்று. அவளை மெரினாவில் சந்திக்கவும் ஸ்ரீ ராமச்சந்திரனாக இருந்த அவனுக்குள் மீண்டும் சுதீராவின் காதல் காதல் முளையிட்டது. பாதுகாப்பற்ற உடலுறவு மேற்கொள்ளப்பட்டது. சுதிரா இதற்கு முன் தான் மனம் விரும்பிய பல பேருடன் பாதுகாப்பற்ற உடலுறவு கொண்டிருப்பவள். அதில் அவளின் கருத்துக்கள் தனிப்பட்டது. அது அவளின் விருப்பமான சுதந்திரம். குமாருடன் உடலுறவு கொண்ட சிறு தினங்களில் அவளுக்கு எய்ட்ஸ் என ஊர்ஜிதம்




**எரியும் பூந்தோட்டம் | எழுத்தாளர்: சலீம்**
**தமிழில்: சாந்தாதத்**
**பக்கங்கள்: 250 | விலை: ரூ.145**
**வெளியீடு: சாகித்திய அகாதமி**

ஆகிவிட்டது. அதை குமாரிடம் தெரிவிக்க தனக்கும் எய்ட்ஸ் என பரிசோதனை செய்யாமலே தானே முடிவெடுத்து..

மனைவி குழந்தைகள் உறவுகள் அலுவலகப் பணியாளர்கள் என எல்லோரிடமும் இருந்து தன்னை தனிமைப் படுத்திக் கொண்டு மேலும் தன்னைத் தானே தண்டனை உள்ளாக்கினார். சமீரா குமாருக்கு லெட்டர்.

எழுதி வைத்து விட்டு சூசைட் அட்டெண்ட் செய்துவிட குமாருக்கு மேலும் பீதி பற்றிக் கொண்டது. மேலும் தன் அலுவலகப் பணியாளர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் இணையருக்கும் எய்ட்ஸ் நோய் இரத்தம் உடலில் ஏற்றியது மூலம் பரவ இந்த சமூகம் குடும்ப நபர்கள் உட்பட எல்லோரும் அவர்களை விலக்கி வைக்க அவர்களும் சூசைட் அட்டெண்ட் செய்துவிட்டனர். சுற்றி எங்கிலும் எய்ட்ஸ் குறித்த பேச்சே...

தேவதை போன்ற மனைவி இருக்க அந்நியப் பெண்ணுடன் பாதுகாப்பற்ற உடலுறவு கொண்டதால் வந்த தண்டனை எய்ட்ஸ். விளைவை நானே அனுபவிக்கிறேன் என தன்னைத்தானே கடிந்து இன்பங்களை எல்லாம் தொலைத்து தனித்து வாழ ஆரம்பித்தார் குமார். மேலும் காய்ச்சல் சளி பசியின்மை உடல் எடை குறைவு இப்படி இருக்க யாருக்கும் தெரியாமல் வெகு தூரத்தில் இருக்கும் சிறிய ஆய்வகத்தில் சென்று இரத்த பரிசோதனை செய்ய அதில் ஹெச் எய் வி பாசிட்டிவ் ரிப்போர்ட் வந்தது.

இது ஒருபுறமிருக்க கோடய்யா லாரி கிளீனிங் செய்பவர். திருமணம் ஆகி நாகமணி என்ற கண்ணுக்கழகான மனைவியும் சீனு என்ற 4வயது குழந்தையுமாக நாட்கள் நகர... சில தினங்கள் காய்ச்சல் விடாது தொற்றிக் கொண்டது. எவ்வளவோ மருந்துகள் கொடுத்தும் பயனில்லாது போய் மருத்துவமனையில் இரத்தப் பரிசோதனை செய்ய அவருக்கு எச் எய் வி பாசிட்டிவ் என தெரிய வரவும் அந்த மருத்துவமனை ஊழியர்கள் யாரும் தொட மாட்டோம். எங்களுக்கும் பரவிவிடும் என புழுப் பூச்சிகளை விட ஈனமாய் நடந்து கொண்டனர்..

சீனுவும் அடிக்கடி நோய்வாய்ப்படுவது நாகமணிக்கு ஞாபகம் வந்தது. உடனே மருத்துவர் ஆலோசனைக்கு இணங்க இருவரும் வெஸ்டர்ன் பிளாஸ்ட் டெஸ்ட்

செய்ய இருவருக்கும் எய்ட்ஸ் பாசிட்டிவ் 61 601 உறுதி. மருத்துவமனை ஊழியர்கள் கோடய்யாவை கையில் கூட தொட மறுத்து கடப்பாறையைக் கொண்டு தள்ளி விட்டு ரிக்ஷாவில் ஏற்ற மறுத்து நாகமணி அவனைத் தோளிலேயே தூக்கி வீடு வந்து சேற... நம்ம மீடியாக்கள் எல்லாம் அவள் வீட்டை நோக்கி படையெடுத்து அவர்களின் மூவர் படமும் எல்லா தொலைக்காட்சியிலும் இடம் பெற எல்லோருக்கும் அவள் குடும்பம் எய்ட்ஸ் பாதிக்கப் பட்டதென ஊரை விட்டு காலி பண்ண வைத்தனர்.

அங்கிருந்து வேறு சேரிக்கு சென்று அங்கு குடிசை பார்த்து கோடய்யாவையும் சீனுவையும் வீட்டில் இருக்க வைத்து விட்டு கூலி வேலை தேட டவுன் க்கு சென்று விசாரித்தாள் நாகமணி. அப்போது மருத்துவமனை ஊழியர் அவளை கண்டுகொள்ள அவளோ அவன் கண்ணில் படாமல் ஓட்டமும் நடையுமாய் வீடு வருவதற்குள் ஊழியர் அந்த சேரியை அடைந்து தகவல் சொல்ல ஊர் மக்களின் வசைகளுக்கு ஆளாகி கல்லடி பட்டு உள்ளே சென்றால் கோடய்யாவின் உயிர் பிரிந்திருந்தது. உடலை அகற்ற கூட ஊரார் முன் வரவில்லை. முனிஸ்பாலிட்டி வேலைக்காரர்களும் தொடவே பயந்தனர். ஊராரிடம் இருந்து கடப்பாரை பெற்று ஒரு தோட்டியில் கோடய்யாவைக் கட்டி முதுகில் சுமந்து கையில் துணிப் பையையும் சீனுவையும் சுமந்து நடக்கலானாள்.

யாரும் காணாத வெகு தூரம் கடந்து நாணல் செடி கொடிகள் குவிந்த இடத்தில் குழிதோண்டி அவனை உள்ளே போட்டு மூடி பேரழுகையிட்டு நகன்று ரயில் நிலையம் செல்ல அங்கே மஸ்தானம்மா என்பவளின் தாய்போன்ற பரிவு கிடைக்க அவளுடன் பிச்சையெடுத்து பிழைக்கலானாள். சிங்கையா என்ற காவலாளி அவர்களுக்கு தினமும் தொல்லை கொடுத்து காசைப் பிடுங்கி நாகமணியை கற்பழிக்கவும் செய்தான். விளைவு அவனுக்கும் எச் எய் வி என்பது தான். அங்கிருந்த அத்தனை பேரையும் அவன் அடித்து விரட்ட மஸ்தானம்மா இறந்து விட தனக்கு கிடைத்த ஒரே ஆத்மார்த்த உறவின் இழப்பை தவிர்க்க முடியாது அவளை அநாதையாக இல்லாமல் மகள் என்ற அந்தஸ்தோடு நகராட்சியில் எரித்து விட்டு ரயிலேறினாள் சீனுவுடன்.

விஜயவாடா சென்று அங்கிருந்த மேரி மாதா சர்ச்சில் சிறிது காலம் பிச்சை எடுத்து சீனுவை பள்ளிக்கு அனுப்பவும் ஆரம்பித்தாள். அங்கேயும் அவளைக் கண்டு கொண்டு இவள் இங்கிருந்தால் எங்களுக்கும் தொற்றிக் கொள்ளும் என அவளை விரட்ட விசயம் பிரஸ்க்கு தெரிந்து செய்தியானது எய்ட்ஸ் பாதிக்கப்பட்ட சிறுவனை பள்ளியில் சேர்க்காமல் இருப்பது சமூக கொடுமை என... சர்ச் வாசலில் சக பிச்சைக்காரர்களுக்கு தெரிந்து போக அனைவரும் அவளைக் கல்லால் தாக்கி மயங்கி விழ பாதிரியார் கண்டு அவளை எய்ட்ஸ் பாசிட்டிவ் கேர் சென்டரில் சேர்த்தார். அங்கு அவளைப் போல் 50பேர் இருக்க அவளுக்கு மிகுந்த ஆச்சரியமும் கூடிய மன திருப்தி அளித்தது.

மாதவியின் உதவியால் அங்கேயே கல்வி கற்று எய்ட்ஸ் கவுன்சிலராக மாறி வீதியெங்கும், பாலியல் தொழில் செய்யும் பெண்கள் என எல்லோரிடமும் பிரச்சாரம் மேற்கொண்டார் நாகமணி அம்மா... உலகமெங்கும் நடந்த எய்ட்ஸ் குறித்த மாநாட்டில் பாராளுமன்றத்தில் அவளுக்கு பேச வாய்ப்பு வந்தது. உண்மையில் எய்ட்ஸை வென்றவர். ●

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

(பதிவு எண்.237/84)

மாணிக்க ஆண்டு (1984 - 2023)

46, தேரடி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600005.

## சர்வதேச மகளிர் தினம் - 2024

# மகளிர்
# மாநில சிறப்பு மாநாடு

**2024, மார்ச் -9, சனிக்கிழமை,**
**ராம்லஷ்மி பாரடைஸ், மாதவரம், சென்னை.**
**09-03-2024, காலை 10- மணி**

## கொடியேற்றம்
## தியாகிகளுக்கு அஞ்சலி

தலைமை
**சி.பரமேஸ்வரி**
மாநில அமைப்பாளர்,
மகளிர் துணைக்குழு

வரவேற்புரை
**க.ரேணுகாதேவி**
மாவட்ட அமைப்பாளர்,
மகளிர் துணைக்குழு, தென்சென்னை மாவட்டம்

## மாநாட்டு நிகழ்வுகள்

ஒருங்கிணைப்பு (ம) தொகுப்பாளர்
**தெ.வாசுகி**
துணை பொதுச் செயலாளர்

மாநாட்டு நோக்க உரை
**கோ.பழனியம்மாள்**
மாநில துணைத் தலைவர்

துவக்க உரை
**மு.அன்பரசு**
மாநிலத் தலைவர்

தீர்மானங்கள் - முன்மொழிதல் - வழிமொழிதல்

**மு.செல்வராணி**
மாநில துணைத் தலைவர்

**உ.சுமதி** **ச.ஹேமலதா**
மாநில செயலாளர்கள்

நிறைவுரை
**ஆ.செல்வம்**
பொதுச் செயலாளர்

நன்றியுரை
**ஜெ.சரஸ்வதி**
மாவட்ட அமைப்பாளர், மகளிர் துணைக்குழு, வடசென்னை மாவட்டம்

## சிறந்த மகளிர் சாதனையாளர்களுக்கு கௌரவிப்பு நிகழ்வுகள்

### கலை நிகழ்வுகள்




*தப்பாட்டம்
*சிலம்பாட்டம்
*நடனம்
*நாடகம்
*பாடல்கள்
*கவிதை வாசிப்பு




### மாநாடு வழிநடத்தும் குழு

**சி. கலைச்செல்வி**
மாவட்ட தலைவர், தென்சென்னை மாவட்டம்

**க. வெண்ணிலா**
மாவட்ட செயலாளர், திருவள்ளூர் மாவட்டம்

**ம.சுகந்தி**
மாவட்ட செயலாளர், திண்டுக்கல் மாவட்டம்

**தே.பூங்குழலி**
மாவட்ட தலைவர், செங்கல்பட்டு மாவட்டம்

**பா.ராணி**
மாவட்ட தலைவர், நாகை மாவட்டம்

**A.ராணி**
மாவட்ட தலைவர், திருப்பூர் மாவட்டம்

**க. திவ்யா**
மாவட்ட தலைவர், திருவள்ளூர் மாவட்டம்

**ஆ.முருகேஸ்வரி**
மாவட்ட தலைவர், இராமநாதபுரம் மாவட்டம்

## கருத்துரையாளர்கள்


**உ.வாசுகி** அவர்கள்
அகில இந்திய துணைத் தலைவர், அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம்

**திரைக் கலைஞர் ரோகினி** அவர்கள்
மாநில துணைத் தலைவர், தமுஎகச

## சிறப்பு விருந்தினர்கள்

**திருமிகு. கனிமொழி கருணாநிதி** அவர்கள்
பாராளுமன்ற உறுப்பினர்

**மாண்புமிகு மேயர் திருமதி இரா.பிரியா** அவர்கள்
சென்னை மாநகராட்சி



# நான் யார்? - பெரியார்

**- முகநூல் பதிவு**

என்னைப் பற்றி பலரும் பலவிதமாகச் சொல்லி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம்.

"மிகவும் பொல்லாதவன்" என்றோ

"மிகப் பெரும் தலைவன்" என்றோ சிலர் என்னை உங்களுக்கு அறிமுகப்படுத்தி இருக்கலாம்.

எதுவாக இருந்தாலும், அதை எல்லாம் பொருட்படுத்தாமல், உண்மையிலேயே நான் யார்?, நான் என்ன பேசினேன், என்ன எழுதினேன், என்ன சிந்தித்தேன், எதற்காகப் போராடினேன், எப்படி வாழ்ந்தேன் என்று நீங்களாகவே நேரடியாகத் தேடி அறிந்துகொண்டு, ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்று விரும்புகிறேன். தேவை என்று பட்டால் நான் சொன்னதில் எதையேனும் சிந்தித்துப் பாருங்கள். தேவை இல்லை என்று தோன்றினால் தாமதிக்காமல் ஒதுக்கிவிடுங்கள். என் வழியும் அதுதான். உங்கள் சாதி ஒரு மனிதனைத் தடுத்து நிறுத்தி, உன் அம்மா யார், உன் அப்பா யார், உன் தாத்தா, பாட்டி எல்லாம் யார், அவர்கள் பின்னணி என்ன என்றெல்லாம் விசாரணை நடத்துகிறது. அதன் பிறகே அந்த மனிதனை மதிப்பதா வேண்டாமா என்று முடிவெடுக்கிறது. அப்படிப்பட்ட மோசமான சாதி என் பக்கத்தில் மட்டுமல்ல, எந்த ஒரு மனிதனுடைய பக்கத்திலும் நெருங்கி வரக் கூடாது என்பேன்.

உங்கள் மதம் இன்னொரு மதத்தை உளமாற வெறுக்கக் கற்றுக் கொடுக்கும் என்றால்; வேறு மதங்களை நம்புபவர்களையோ ஒரு மதத்தையும் நம்பாதர்களையோ பழிக்கும் என்றால்; அப்படி ஒரு மதத்தைப் பின்பற்றுவதால் வரும், புண்ணியமோ பலனோ எனக்கு வேண்டாம் என்று அடித்துச் சொல்வேன். மற்றபடி, எனக்கும் கடவுளுக்கும் எந்தக் கொடுக்கல் வாங்கல் சண்டையோ பூர்வ ஜென்மத்துப் பகையோ இல்லை.

என் நாட்டில் சிலருக்கு மட்டும்தான் சுதந்திரம் உண்டு, வேறு சிலருக்கு இல்லை என்றால்; சிலரே இந்தியர்கள், வேறு சிலர் அந்நியர்கள் என்றால்; ஏழைகள் ஏழைகளாகவே நீடிப்பார்கள் என்றால்; பெண்கள் ஆண்களுக்குச் சமமாக நடத்தப்பட மாட்டார்கள் என்றால்; ஒருவரால் அச்சமின்றி எழுதவோ பேசவோ முடியாது என்றால்; இந்தக் குறைகளை எல்லாம் சுட்டிக்காட்டுவது தேச துரோகம் என்றால்; நான் என்ன செய்தாலும் நீ என் பக்கம் தான் நின்றாக வேண்டும் என்று என் நாடு என்னிடம்

எதிர்பார்க்கும் என்றால்; அப்படியொரு நாட்டின் மீது எனக்குப் பற்று இல்லை என்பேன்.

என் மொழி அறிவை வளர்க்கிறதா? அறிவியல் சிந்தனையை ஊக்கப்படுத்துகிறதா? பரந்த மனத்தோடு உலகம் எங்கிலும் இருந்து வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்கிறதா? பதிலுக்கு எல்லோருக்கும் தன் கதவுகளைத் திறந்துவிடுகிறதா? வேறுபாடின்றி எல்லோரையும் அணைத்துக்கொள்கிறதா என்றெல்லாம் கவனமாகப் பார்த்துக்கொண்டிருப்பேன். இல்லை என்று தெரிந்தால் அந்தக் கணமே என் மொழிப்பற்றை உதறிவிடுவேன். கோயிலில் சிலர் நுழையலாம், வேறு சிலர் நுழையக் கூடாது என்று சொன்னால், அப்படி ஓர் இடம் எனக்குத் தேவையில்லை என்று என் வழியில் போய்விடுவேன். கடவுளோ காந்தியோ நேருவோ அல்லது வேறொரு மகானோ, யாராக இருந்தாலும் ஒருவர் செய்வது தப்பு என்று என் மனதுக்குப் பட்டால் தப்பு என்றே அடித்துச் சொல்வேன்.மனிதர்களின் முன்னேற்றத்தைத் தடுக்கும் பிற்போக்குத்தனமான கருத்து என்று தெரிந்துவிட்டால், அது எவர் வாயில் இருந்து வந்திருந்தாலும் அதை வலுவாக எதிர்ப்பேன்.

ஒரு மனிதனை மதிக்கத் தெரியாத எந்தத் தத்துவமும், எந்தக் கோட்பாடும், எந்தப் படைப்பும், எந்தக் கலையும், எந்த ஓவியமும், எந்த இசையும், எந்த வழிபாடும், எந்தப் பண்பாடும், எந்தப் பெருமிதமும், எந்த வாழ்க்கை முறையும் எனக்கு வேண்டாம். எல்லாவற்றையும் வேண்டாம் வேண்டாம் என்று ஒதுக்குகிறாயே, உனக்கு என்னதான் வேண்டும் என்று எரிச்சலோடு கேட்கிறார்கள். ஒவ்வொரு மனிதனும் தன்மானமும் அறிவும் பெற்று வாழ வேண்டும் என்று விரும்புகிறேன். அதற்குக் குறுக்கே வரும் சக்திகள் என்னவாக இருந்தாலும் ஒன்றுவிடாமல் அவை அனைத்தையும் எதிர்க்கிறேன்.எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் இந்த ஒரு வேலையைத்தான் செய்து வருகிறேன்.

நினைவு தப்பும் காலம் வரும் வரை இந்த ஒன்றைத்தான் செய்வேன். எனக்குப் பிறகு நான் பேசிய ஒவ்வொரு பேச்சும் நான் எழுதிய ஒவ்வொரு சொல்லும் என் வேலையை இழுத்துப் போட்டுக்கொண்டு செய்யும்.

இதை எல்லாம் செய்ய நான் யார் என்றால்? பலவற்றைப் படித்தவன் என்றோ, பெரிய பண்டிதன் என்றோ, மாபெரும் சிந்தனையாளன் என்றோ, கருதிக்கொண்டு நான் பொதுவாழ்க்கைக்கு வந்துவிடவில்லை. வேறு யாரும் கண்டுகொள்ளாததால், நானே இந்தப் பணியை எடுத்து மேலே போட்டுக்கொண்டு செய்ய ஆரம்பித்துவிட்டேன்.இதில் விருதோ மதிப்போ கிடைக்காது என்று தெரியும்.

ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோரையும் பகைத்துக்கொள்ள வேண்டியிருக்கும்; ஒவ்வொருவரிடமிருந்தும் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாக நேரிடும் என்றும் தெரியும். தெரிந்தேதான் வந்தேன். நானே எழுதி, நானே அச்சுக்கோத்து, நானே அச்சடித்து, நானே படிக்க வேண்டியிருந்தாலும் பரவாயில்லை, எழுதுவோம் என்றுதான் எழுத ஆரம்பித்தேன். ஒருவர் காதிலும் விழாவிட்டாலும் பரவாயில்லை என்று வீதிக்கு நடுவில் நின்றுகொண்டு உரக்கப் பேச ஆரம்பித்தேன்.

நீங்கள் என்னை என்னதான் சொன்னாலும், என்னதான் செய்தாலும் உங்கள் ஒருவர் மீதும் தனிப்பட்ட முறையில் ஒரு துளி கோபமோ வெறுப்போ கொள்ளமாட்டேன்.வலிக்குமே என்று அஞ்சிக்கொண்டு இருக்காமல் ஒரு மருத்துவர் எப்படி உங்களுக்கு ஊசி போடுகிறாரோ, தேவைப்பட்டால் எப்படி அறுவைசிகிச்சை செய்கிறாரோ அப்படியே நானும் அதிக உரிமை எடுத்துக்கொண்டு உங்களை எல்லாம் விமர்சிக்கிறேன் என்று எடுத்துக்கொள்ளுங்கள். உங்கள் ஒவ்வொருவரையும் நான் அளவுகடந்து நேசிக்கிறேன். தீங்கு விளைவிக்கும் எந்தக் கிருமியும் உங்களை அண்டிவிடக் கூடாது என்பதற்காகத்தான் உங்களை எந்நேரமும் கவனித்துவருகிறேன்.

நாக்கில் தழும்பு ஏறும்வரை உங்களுக்காகப் பேசுவேன். கை சாய்ந்து கீழே தொங்கும் வரை உங்களுக்காக எழுதுவேன். கால்கள் துவளும்வரை உங்கள் பட்டித் தொட்டிகளில் எல்லாம் நடப்பேன். எனக்கு உண்மை என்று பட்டதை நான் நம்புவதைப் போல், நீங்களும் உங்களுக்கு உண்மை என்று பட்டதை நம்புங்கள். அந்த உண்மையைப் பாதுகாக்கப் போராடுங்கள்.

# பேனாவிலிருந்து பேப்பரில் சலிக்கும் உருவம்!

**- ஜிஜி**

என்னுடைய உயரதிகாரியின் மகன் திருமணத்திற்காக நான் சென்ற மாதம் மேட்டுப்பாளையம் சென்றிருந்தேன். மேட்டுப்பாளையம் வரைதான் இரயில் இருந்தது. காலையிலேயயே மேட்டுப்பாளையம் அடைந்து விட்டதால் மாலையில் திருமண வரவேற்பு நடக்கும் வரை என்ன செய்வது என்ற யோசனை எழ அதற்குள் ஊட்டிக்கு ஒரு சுற்று சென்றுவிட்டு வந்தால் என்று தோன்றியது. மேட்டுப்பாளையத்திலிருந்து ஊட்டிக்கு சென்ற ஒரு வாடகை ஜீப்பில் ஒட்டிக்கொண்டேன். கிட்டத்தட்ட ஊட்டியை நெருங்கும் நேரத்தில் ஜீப்பில் வந்தவர்களில் சிலர் சிறுநீர் கழிக்க வண்டியை கொஞ்சம் நிறுத்த கேட்டுக்கொண்டதால் ஒரு மலையின் திருப்பத்தில் அமைக்கப்பட்டிருந்த பாலத்தின் அருகில் வண்டியை நிறுத்தினார்.

எல்லோரும் இறங்கிவிட நானும் சரி இருப்பதை கழிந்துவிடுவோம் என்ற எண்ணத்தில் பாலத்தின் ஓரத்தில் ஒதுக்குப்புறத்துக்குப் போனேன். அப்போது பாலத்தின் அடியில் இருந்த தோட்டத்தில் யாரோ பேசும் குரல் கேட்டது. அந்தக்குரல் பரிச்சயமான குரல் போலத் தோன்றியதால் காதுகளையும் கண்களையும் கூர்மையாக்கினேன். ஒரு 30 பேர் ஆண்களும் பெண்களுமாக இருக்க அவர்கள் மத்தியில் ஒருநபர் பேசிக் கொண்டிருந்தார். அவர்கள் அனைவரும் வயல்வேலை செய்யும் ஆட்கள் போல் தோன்றினர். 'ஏங்க அரசாங்கத்தில் இவ்வளவு திட்டங்கள் இருக்கு. இவை எதையும் நீங்க வாங்காம இருக்கீங்க.' என்ற குரலில் என் பதின்மவயது நண்பன் சாமுவேல் குரல் என்பது புரிந்தது. ‘‘ஸாம்... ஸாம்...’’ என்று கை நீட்டி கத்தினேன். கூட்டத்தில் இருந்த ஒருவர் நான் அழைப்பதை அந்த நபரிடம் தெரிவிக்க அவர் என்னை திரும்பிப் பார்த்தார். ‘‘நான் சேகர்... சேகர்...’’ என்று கையசைக்க ஒரு சில நொடிகளில் என்னை அடையாளம் புரிந்து கொண்டு கையசைத்தார். அங்கிருந்த ஒரு நபரை அனுப்பி என்னை அழைத்து வரச்சொல்ல, நான் ஜீப் டிரைவருக்கு பணத்தை கொடுத்து விட்டு பாலத்தின் கீழே சாமுவேல் அனுப்பிய நபரின் உதவியோடு இறங்கினேன்.

என்னை ஆரத்தழுவிக்கொண்ட ஸாம், ‘‘சேகர் எப்படியிருக்கே பாத்து பல வருஷங்கள் ஆயிடுச்சு இல்லே?’’ என்றான்.

‘‘அது கிடக்கட்டும் ஸாம் இங்கே என்ன பண்றே...?’’ என்று கேட்டேன்.

‘‘ஒரு பத்து நிமிஷம், இவங்கல்லாம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள்.



டீ வித் காம்ரேட்

நேரத்துக்கு வேலைக்கு போகணும். இவங்களை அனுப்பிட்டு சாவகாசமா நாம பேசலாமே.'' என்றான்.

தொண்ணூறுகளில் என்று நினைக்கிறேன். அகில இந்திய வானொலி நிலையத்தில் ஒரு கவிதை வாசிப்பு ரிக்கார்ட்டிங்காக போயிருந்த போது எனக்கும் ஸாமுக்கும் பரிச்சயம் ஏற்பட்டது. அவனும் கவிதை வாசிப்புக்காக வந்திருந்தான். அப்போது அவனும் பேச்சிலர் நானும் பேச்சிலர். கவிதை வாசிப்பு ரிக்கார்ட்டிங் முடித்து விட்டு கலங்கரை விளக்கத்தின் பின்னுள்ள கடற்கரை மணலில் எங்களுடைய கவி ஆர்வங்களை, சமுதாயத்தை, நாட்டு நடப்பைப் பற்றியெல்லாம் பேசிக்கொண்டிருந்தோம். அதன் பிறகு எங்கள் சந்திப்பு இறுக்கமாகி அடுத்த ஆறுமாதங்களில் இருவரும் சேர்ந்து நுங்கம்பாக்கத்தில் அறை எடுத்து தங்கி அவரவர் வேலைக்கு சென்றுவர ஆரம்பித்தோம். இரண்டு வருடங்களில் வசந்தம் என்ற பதினாறு பக்க பல்சுவை மாத இதழ் ஆரம்பித்து எங்களுடன் வானொலி தொடர்பில் இருந்த நண்பர்களை சந்தாதாரர்களாக்கி மாதம் ஆயிரம் பிரதிகள் அச்சடித்து அனுப்பினோம். எங்கள் இரண்டு பேருக்கும் சமூக சிந்தனையும் சமூக அக்கறையும் இருந்ததால் சமூக விழிப்புணர்வு கட்டுரைகளையும், கதைகளையும், கவிதைகளையும் எழுதியும், தேடிப்பிடித்தும் வெளியிட்டு வந்தோம்.

நாங்கள் வாடகையிருந்த வீட்டின் உரிமையாளர் இறந்துவிட அவருடைய மனைவியும் மகனும் மருமகளும் பேரக்குழந்தைகளும் இருந்த தரைதளத்தில் ஒருநாள் பெரிய வாக்குவாதம் நடந்து அந்தப் பெரியம்மாவை அவளுடைய மகன் வீட்டைவிட்டு வெளியே தள்ளி 'உனக்கு சொத்தும் இல்லை சோறும் இல்லை போய் எங்கேயாச்சும் பிச்சை எடுத்து அப்படியே செத்துப்போ' என்று கதவை சாத்திவிட எனக்கும் ஸாமுக்கும் பாவமாக இருந்தது. தன் வீட்டு வாசலிலேயே நாள் முழுவதும் அழுது கிடந்த அந்த அம்மாவை சாம் அழைத்துச் சென்று டீயும் வடையும் வாங்கிக் கொடுத்து ரெங்கராஜபுரத்தில் உள்ள அரசு மகளிர் விடுதியில் தங்க வைத்தான். அதன் பிறகு நானும் அவனும் சேர்ந்து அந்த அம்மாவுக்கு ஆறுதல் கூற அந்த அம்மாவுக்கு சொத்தில் உரிமை இருக்கிறதா இல்லையா என்பதை ஸாம் ஆராய்ந்து தாசில்தார் அலுவலகம் முதல் கலெக்டர் அலுவலகம் வரை சளைக்காமல் நடைநடந்து முதலமைச்சருக்கும் உயர்நீதிமன்ற நீதிபதிக்கும் மனித உரிமை ஆணையத்திற்கும் சளைக்காமல் மனுக்கள் அனுப்பி 1989ஆம் ஆண்டு அரசாணையின்படி கணவன் சொத்தில் மனைவிக்கும் மகள்களுக்கும் உரிமை உண்டு என்பதை வலியுறுத்தி பாதிக்கப்பட்ட நபருக்கு அவர் கணவர் சொத்தில் உரிய பங்கு பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தொடர் மனுக்கள் நினைவூட்டல்கள் அனுப்பி ஒருநாள் அரசாங்கத்திலிருந்த உயரதிகாரிகள் அந்த அம்மாவை நேரில் வந்து விசாரித்து அவர் மகனின் மீது நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தனர். அடுத்த மாத பத்திரிகைக்கு கட்டுரைகள் கவிதைகள் தேடி நான் நூலகங்களையும் புத்தக விற்பனை கடைகளையும் தேடிக் கொண்டிருந்தேன். இதனால் ஸாம் மீது எனக்கு கொஞ்சம் கோபம் ஏற்பட்டது. "என்ன ஸாம் நீ பாட்டுக்கு அந்த அம்மாவுக்கு உதவி பண்ணப் போறேன்னு தினமும் போய்க்கிட்டிருந்தா பத்திரிகை வேலையை யார் பாக்கிறது?'' என்றேன். "பத்திரிகை வேலையை விட இது ரொம்ப முக்கியம் சேகர். பத்திரிகை ஒருமாதம் வரலேன்னா ஒண்ணும் குடிமுழுகி போயிடாது. ஆனா அந்தம்மாவுக்கு கிடைக்க வேண்டிய உரிமையை வாங்கித் தரலேன்னா அது ஒரு படிப்பறிவில்லாத பெண்ணுக்கு மட்டுமில்ல இந்த சமூகத்துக்கே நாம செய்யற அநீதி.''

"சரி...அப்போ 700 பேர்கிட்டே சந்தா வாங்கிட்டு நாம புத்தகம் அனுப்பலேன்னா நம்ம பேர் கெட்டுப்போயிடாதா?'' என்றேன் நான்.

"இந்தமாதம் நீ பாத்துக்க சேகர். அந்த அம்மாவுக்கு எதாவது முடிவு பண்ணிட்டுதான் அடுத்த வேலை. இதை கொஞ்சம் ஆறப்போட்டாலும் பாதியிலேயே விட்டுட்டாலும்...'' என்று பேசிக்கொண்டிருக்கும்போதே கீழ் வீட்டிலிருந்து அந்த அம்மாவின் மகன் சில நபர்களுடன் வந்து, "உங்களுக்கு வீடு வாடகைக்கு விட்டா நீங்க எங்கம்மாவுக்காக வேலை பாக்கறீங்களா..?'' என்று எங்கள் இருவரையும் நையப்புடைத்து

அறையில் இருந்த புத்தகங்கள் சாமான்கள் டிவி எல்லாவற்றையும் நாசப்படுத்திவிட்டு சென்றனர். அதன்பிறகு நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து எங்கள் உடைமைகளை அந்த வீட்டிலிருந்து எடுத்துக்கொண்டு தி.நகர் ரெங்கநாதன் தெருவில் உள்ள மேன்ஷனுக்கு குடிபெயர்ந்தோம்.

அப்போதும் ஸாம் என்னுடன் வராமல் கலெக்டர் அலுவலகத்தின் மனு கொடுக்கப்போகிறேன் என்று போய் நின்றிருந்தானே தவிர அறையை ஒழுங்குபடுத்த வரவில்லை. எனக்கு அடிபட்டது தெரிந்து என்னுடைய அக்காவீட்டுக்காரர் (மாமா) என்னை அழைத்துகொண்டு தன் ஒண்டுக்குடித்தன வீட்டில் கொண்டு வைத்துக் கொண்டார்.

அதன்பிறகு என் காலம் கவர்ன்மெண்ட் வேலை, கவியரங்கம், கதையாக்கம் தொழிற்சங்கம் என உருமாறி தற்போது ஒரு தொழிற்சங்க பத்திரிகையில் உரிமைகள் பற்றியும், புரட்சிகள், ஏழைகளையும், தொழிலாளர்களையும், விவசாயிகளையும் உரிமைகள் இல்லாது செய்து வரும் அரசாங்கங்கள் பற்றியும் மிகவும் உணர்ச்சி பூர்வமாக எழுதி வருகிறேன்.

இதோ ஸாம் வந்து விட்டான். 'ஸாம் இங்கேதான் தங்கியிருக்கியா?'

“இல்ல சேகர் சென்னையில தான். அன்னிக்கி பிரிஞ்சோம் இல்ல. அதோடு என்னோட இலக்கிய அறிவை, கவிதாவிலாசத்தை எல்லாம் பரண்மேலே து/ர்க்கிப்போட்டுட்டு, மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த அவர்களுக்கு இந்த அரசாங்கம் கொடுத்திருக்கிற சலுகைகளையும் உரிமைகளையும் கேன்வாஸ் பண்ணிக்கிட்டு இருக்கறதோட மட்டுமில்லாம அதை அவர்கள் பெறவும் நடவடிக்கை எடுத்துகிட்டிருக்கேன்.''

“இந்த ஊர்ல எப்படி...''

“மக்கள் திசைகாட்டி இயக்கம்''னு ஆரம்பிச்சு அந்தந்த ஊர்களில் என்னைப்போல உள்ள சமூக ஆர்வலர்களை வச்சு அவங்களுகு பயிற்சி கொடுத்து சென்னையில இருந்து சுற்றுப்பயணம் போய் அவங்களுக்கு தேவையான உரிமைகளை அதிக செலவில்லாம வாங்கித்தர எங்கள் இயக்கத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கிறோம். சரி நீ என்ன பண்றே?''

“கவர்ன்மெண்ட் வேலை. தொழிற்சங்கத்துல பத்திரிகை பணி. அரசாங்கத்திற்கு கோரிக்கை, ஆர்ப்பாட்டத்திற்கு நோட்டீஸூ, மாநாட்டுக்கு கட்டுரை, உரிமைகளை தட்டிக்கேட்க உணர்ச்சிப் பிழம்பான கவிதைகள் இப்படித்தான் போய்க்கிட்டிருக்கு'' என்று சொல்லி கல்யாணத்திற்கு வந்த விஷயத்தை சொன்னேன்.

“பரவாயில்லை. நாம ரெண்டு பேரும் ஒரே நோக்கத்துக்காகத்தான் வாழ்ந்துகிட்டிருக்கோம் தடம் மாறாமல். அந்த வகையில் சந்தோஷம்தான்.'' என்றவன்.

'சரி நான் அடுத்த ஊருக்கு கிளம்பணும். நேரமிருந்தா கூட வா' என்றான்.

“எவ்வளவு நேரம் ஆகும்?''

“ரெண்டு மணி நேரத்துல திரும்பிடலாம். லஞ்ச் முடிச்சுட்டு கீழே இறங்கிடலாம்.'' என்றான்.

இப்போது நான் அவனுடன் நான் பயணித்துக் கொண்டிருக்கிறேன். என் மனதிற்குள் ஒரு நெருடல் எங்கள் இருவரில் யாருடைய பணி சிறப்பானது என்று என் மனது ஒப்பீடு செய்து கொண்டிருக்க வாடகை ஜீப்பில் பக்கத்தில் அமர்ந்திருந்த நபரிடம், “ஏன் இன்னும் அவங்களுக்கு ரேஷன் கார்டு தரலே. நாளைக்கு ஒரு ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு பண்ண முடியுமா?'' என்று கேட்டுக் கொண்டிருந்தான் ஸாம்.

எனக்குப் புரிந்தது நான் வெறும் “பேனாவிலிருந்து பேப்பரில் சலிக்கும் உருவம்'' என்று.

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com